# உதயன்

சுடர் : 36 கதிர் : 251 | வெள்ளிக்கிழமை | ஆடி 21 ஆம் நாள் 06 ஓகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## கர்ப்பிணிப் பெண்கள் வீட்டிலிருந்து வேலை

கொழும்பு, ஓக. 6
கர்ப்பிணிப் பெண்கள் வேலைக்குச் சமூகமளிக்காமல் வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கு ஏதுவாக புதிய 19

## கொரோனா கோரத் தாண்டவம்

# வடக்கு மருத்துவமனைகள் தொற்றாளர்களால் நிரம்பின



- மருத்துவக்கவனிப்பு தேவைப்படுவோர் அதிகரிப்பு
- இடைநிலை பராமரிப்பு நிலையங்கள் நிறைந்தன
- அபாயக் கட்டத்தை நோக்கி நகர்கிறது வடக்கு
- இரண்டு வாரங்களில் தெற்கின் நிலை வரலாம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 6
வடக்கிலுள்ள வைத்தியசாலைகளின் கொரோனா விடுதிகள், இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்கள் என்பன நிரம்பிய நிலையிலேயே காணப்படுகின்றன. நிலைமை நாளுக்குநாள் தீவிரமாகிச் செல்கின்றது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 19

## எகிறுகிறது கொவிட் பலி நேற்றுமுன்தினம் 94 பேர் சாவு

கொழும்பு, ஓக. 6
கொரோனாவால் நேற்றுமுன்தினம் மேலும் 94 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.
இறந்தவர்களில் 49 ஆண்களும் 45 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 37 ஆண்களும் 36 பெண் 19

## மணித்தியாலத்துக்கு மூன்று பேர் இறப்பு!

கொழும்பு, ஓக. 6
நாட்டில் சராசரியாக ஒரு மணி நேரத்திற்கு 3 பேர் கொவிட் தொற்றால் இறக்கின்றனர் என்று இலங்கை மருத்துவ சங்கத்தின் துணைத் தலைவர் வைத்தியர் மணில்கா சுமனதிலக நேற்றுத் தெரிவித் 19

## 45,000க்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு கொவிட்

*நாடாளுமன்றில் தெரிவித்தார் சுகாதார அமைச்சர் பவித்ரா*

கொழும்பு, ஓக. 6
இலங்கையில் இதுவரையில் 45 ஆயிரத்து 831 சிறுவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேம 19

## யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் இருவர் இறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 6
யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை 19

## நான்கு மருத்துவமனைகளில் அவசர நிலைமை அறிவிப்பு

கொழும்பு, ஓக. 6
கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக 4 மருத்துவமனைகள் அவசர நிலையை அறிவித்துள்ளன.
கொழும்பு தேசிய தொற்று நோயியல் மருத்துவமனை, இரத்தினபுரி, கராப்பிட்டிய மற்றும் ராகம மருத்துவமனைகள் என்பவையே அவசர நிலையை அறிவித்துள்ளன.
குறித்த மருத்துவமனைகளில் நாளாந்தம் பதிவாகும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து இவ்வாறு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது என மருத்துவமனை நிர்வாகங்கள் தெரிவித்துள்ளன. (ம-22)

## வடக்கில் பால்மாவை பதுக்கிய வர்த்தக நிலையங்கள் சிக்கின

*வழக்குத் தொடர முடிவு*

யாழ்ப்பாணம், ஓக. 6
வடமாகாணத்தில் பால்மாவை பதுக்கிய மூன்று நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு, அந்த நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடர பாவனையாளர் அலுவல் 19



கிளிநொச்சி – விளாவோடையில்

## இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் மீட்பு

கிளிநொச்சி, ஓக. 6
கிளிநொச்சி, பரந்தன் விளாவோடை வயல்ப் பகுதியில் இருந்து இராணுவச் சீருடையுடன் மனித எச்சங்கள் நேற்று மீட்கப்பட்டன. குறித்த வயல் காணியை சீரமைத்த காணி உரிமையாளர் எச்சங்கள் அவதானிக்கப்பட் 19

## அரச ஊழியர்களுக்கு இரு கட்டமாகப் பணி!

*விரைவில் சுற்றுநிருபம்*

கொழும்பு, ஓக. 6
கொரோனாத் தொற்று தீவிரமாகிவரும் நிலையில், அரச ஊழியர்கள் வாரத்தில் இரு கட்டங்களாகப் பணிக்காக அழைக்கப்படுவார்கள் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க 19

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு நேற்று தடுப்பூசி ஏற்றப்பட்டது

கொழும்பு, ஓக. 6
கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள 36 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் 'சினோபார்ம்' தடுப்பூசி நேற்று ஏற்றப்பட்டது. தடுப்பூசி ஏற்றல் தொடர்பான மருத்துவர்களின் விளக்கமளிப்புக்களுடன் கைதிகளுக்கு ஊசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்றது என்று அரசியல் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பி.சி.ஆர்., அன்டிஜென் பரிசோதனைகளுக்கு நிர்ணய விலை

கொழும்பு, ஓக. 6

பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளுக்கு நிர்ணய விலையை அறிவிப்பது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது 9 ஆயிரத்து 950 ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரை நாட்டில் பல பகுதிகளில் பல் வேறு முறையில் கொரோனா பரிசோதனைக்கான கட்டணம் அறவிடப்படுகின்றது.

இதனால் குறித்த இரு வகை பரிசோதனைகளுக்கு அறவிடக்கூடிய அதிகபட்ச தொகையை நிர்ணயித்து அறிவிக்கவுள்ளோம்.

சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கு அமைய, நுகர்வோர் விவகார அதிகார சபையினூடாக அடுத்த வாரமளவில் விலை நிர்ணயம் மேற்கொள்ளப்படவுள்ளது. என்றார். (த-இ)

# ஆசிரியர்கள் உட்பட 44 பேருக்கும் பிணை

## வாகனங்களும் மீள ஒப்படைப்பு



கொழும்பு, ஓக. 6

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட 44 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிவான் உத்தரவுக்கமைய தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஆர்ப்பாட்டத்தின்போது பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களும் உரியவர்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தின்போது கைதுசெய்யப்பட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட 44 பேர் கொழும்பு துறைமுக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு கோட்டை நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.

அதன்போதே பிணையில் விடுவிக்கப்பட்டனர். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி அந்த வழக்கு மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சம்பள அதிகரிப்பு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரிய தொழிற்சங்கங்கள் பல இணைந்து குறித்த போராட்டத்தை நாடு முழுவதும் மேற்கொண்டுவருகின்றன.

தற்போதைய கொரோனா சூழ்நிலையில், கொரோனா விதிமுறைகளை மீறினர் என்பது உள்ளிட்ட சில குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு ஆசிரியர்கள் உட்பட 44 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு நேற்றுமுன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. (த-இ)

யாழ்ப்பாணத்திலுள்ள

# இந்தியத் தூதரகம் முன் விரைவில் ஆர்ப்பாட்டம்

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 6

**இந்திய மீனவர்களின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் முன்பாக பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம் என்று யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன பிரதிநிதிகள் தெரிவித்தனர்.**

இந்திய மீனவர்கள் மீது நாம் பகைமை காட்டவில்லை.

ஆனால் நாளாந்தம் அவர்களால் எமது வாழ்வாதாரம் அழிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ். ஊடக அமையத்தில் அவர்கள் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், மேலும் தெரிவித்ததாவது:

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய, எல்லை தாண்டிய, சட்டவிரோத இழுவை மீன்பிடி முறையால் எமது சொத்துக்கள் நாளாந்தம் அபகரிக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன.

சில தினங்களுக்கு முன்னர் தீவகம் மற்றும் தாளையடி பகுதிகளுக்குள் ஊடுருவிய இந்திய மீனவர்கள் எமது கடற்றொழிலாளர்களின் பலகோடி ரூபா பெறுமதியான வலைகளை அறுத்து நாசமாக்கிச் சென்றுள்ளனர்.

இவ்வாறான செயற்பாட்டை இந்திய மீனவர்கள் நிறுத்த வேண்டும்.

இது தொடர்பில் இலங்கை அரசு இந்திய அரசிடம் பேசி தமக்கு நிரந்தர தீர்வைத் தரவேண்டும். என்றனர். (த-இ)

# பெண்களுக்கு அரைப் பங்கு தேசியப் பட்டியலில் வேண்டும்

## நாடாளுமன்ற விசேட குழுவில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 6

தேசியப் பட்டியலிலாவது அரைப்பங்கு பெண்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம், தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழுவில் நேற்றுமுன்தினம் பரிந்துரைத்துள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற பணிப்பாளர் (தொடர்பாடல்) ஷான் விஜயதுங்க அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இந்த ஒன்றியம் சார்பில் விசேட குழுவின் முன்னிலையில் கருத்துக்களை முன்வைத்த அதன் தலைவர் இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, நாடாளுமன்ற, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் 30 வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

அரச சபைகள் மற்றும் ஆணைக்குழுக்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் 33 வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் சகல தேர்தல்களுக்கும் ஒரே சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தையும் இராஜாங்க அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே சுட்டிக்காட்டினார்.

தற்போதைய சூழ்நிலையில் பெண்களுக்கு வேட்புமனுக்களைப் பெற்றுக்கொள்வது சிக்கலானதாகவே உள்ளது. பெண்கள் தொடர்பில் சமூகத்தின் நிலைப்பாடு மாற்றப்பட வேண்டும். தற்போது கடைப்பிடிக்கப்படும் விகிதாசார தேர்தல் முறையானது பெண்களுக்கு சாதகமானதாக இல்லை. நாட்டுக்குள் தேர்தல் வன்முறைகள் இடம்பெறுகின்றனமையும் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அரசியல் கட்சிகளில் பெண்களுக்கு உயர் பதவிகள் வழங்கப்படாமை குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது. (த)

# வீதி அபிவிருத்தி தொடர்பில் எம்.பிக்களுடனும் ஆராய்வு

## அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு



அரசின் வீதி அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து ஆராய்வதற்கு ஆளும் தரப்பு பிரதமகொரடாவும் நெடுஞ்சாலை அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ முடிவு செய்துள்ளார்.

வீதி அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து இதன்போது ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி முதற்கட்டமாக, கேகாலை, பதுளை, கொழும்பு மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து ஆராயப்படவுள்ளது.

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் 15 நிமிடங்கள் ஒதுக்கவும் அமைச்சர் ஒழுங்குசெய்துள்ளார்.

இதற்கு முன்னர், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அமைச்சர்களுடன் வீதி அபிவிருத்தி குறித்து தனிப்பட்ட முறையில் ஆலோசிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவிலிருந்து தப்ப மூன்று வழிகளே உள்ளன

## வீட்டிலிருந்து வெளியேறாதீர்கள் என்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஓக. 6**

**நாடு முழுவதும் கொவிட்19 நோய் மிகத் தீவிரமாக பரவிவருகின்றது. இறப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்களே. இந்தநிலையில் கொரோனாத் தொற்றிலிருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள மூன்று வழிகளே உள்ளன." என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

01. அவசியமற்ற ஒன்றுகூடல்களை, விழாக்களை தவிர்த்துக் கொள்ளுங்கள். அவசியமின்றி வீடுகளுக்கு வெளியே வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். வழிபாட்டுத் தலங்களில் நடைபெறும் நிகழ்வுகளை உட்பிரகாரங்களில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் நடத்த அனுமதி வழங்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக பல கோவில்களில் நடந்த திருவிழாக்கள் மூலம் கொரோனாத் தொற்று மிக வேகமாக பரவியதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

02. பொதுமக்கள் பொதுஇடங்களுக்கு செல்கின்ற வேளைகளில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும். முகக்கவசங்களை சரியான முறையில் அணிந்திருத்தல் வேண்டும். கைகளை கிரமமாக தொற்றுநீக்கம் செய்யவேண்டும். தனியாள் இடைவெளியை பின்பற்ற வேண்டும்.

03. பொதுமக்கள் கட்டாயமாக தமக்குரிய தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டும். தற்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் சினோபோர்ம் முதலாவது தடுப்பூசி ஏற்றும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**தடுப்பூசி ஏற்றல்**

வடக்கு மாகாணத்தில், நேற்று முன்தினம் மாலைவரை 4 இலட்சத்து 62 ஆயிரத்து 771 பேருக்கு முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இது வடக்கு மாகாணத்தில் உள்ள 30 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையில் 70 வீதமாகும். நேற்றுமுன்தினம் மாலைவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் 2 லட்சத்து 43ஆயிரத்து 400 பேரும் (70வீதம்), கிளிநொச்சி மாவட்டத்தில் 48 ஆயிரத்து 564 பேரும் (67வீதம்), மன்னார் மாவட்டத்தில் 52ஆயிரத்து 532 பேரும் (67பேரும்), முல்லைத்தீவு மாவட்டத்தில் 45ஆயிரத்து 032 பேரும் (69 வீதம்), வவுனியா மாவட்டத்தில் 73ஆயிரத்து 243 பேரும் (74வீதம்) முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட ஏறத்தாழ 2 லட்சத்துக்கும் அதிகமானோர் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளனர். தற்போதுள்ள தீவிரமான கொரோனா பரம்பல் சூழ்நிலையில் பரம்பலைக் கட்டுப்படுத்தவும், இறப்புகளை குறைக்கவும் எம்மிடமுள்ள முக்கியமான உபாயம் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதே.

இனிமேல் மருத்துவமனைகளுக்கும் பொதுஇடங்களுக்கும் செல்வதற்கும் பொதுப் போக்குவரத்துகளில் பயணிப்பதற்கும் தடுப்பூசி ஏற்றிக் கொள்வது கட்டாயமாக்கப்படலாம். எனவே, இதுவரை தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாத 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் உடனடியாக தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (த-26)

# ரி.ஐ.டி. விசாரணைக்கு மேலும் இருவர் அழைப்பு

வன்னேரிக்குளம், ஓக. 6

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் மற்றும் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபரும் பூநகரி பிரதேச சபை உறுப்பினருமான சி.சிறிரஞ்சன் ஆகியோரை பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவுக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவுக்கு நாளைமறுதினம் சமுகமளிக்குமாறு குறித்த இருவருக்கும் பொலிஸாரால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்கள் பலரும் கொழும்பு 4ஆம் மாடியிலும் கிளிநொச்சியில் அமைந்துள்ள பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவின் அலுவலகங்களுக்கும் விசாரணைகளுக்காக அழைத்து நீண்டநேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதனும் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் இன்றைய தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-13)

### யாழ்.நகரிலுள்ள

# பழ வியாபாரியிடம் கப்பம் பெற்றவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 6

பொலிஸ் என்று அடையாளப்படுத்தி பழ வியாபாரியை ஏமாற்றி சுமார் 7ஆயிரத்து 500 ரூபாவை கப்பமாக பெற்றனர் என்று குற்றம்சாட்டப்படும் இருவரில், ஒருவர் யாழ்.பேருந்து நிலையத்தில், நேற்று மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 31 ஆம் திகதி சந்தேகநபர்கள் கப்பம் பெற்றுள்ளனர்.

அதனையடுத்து, அந்தப் பகுதியிலுள்ள சிசிரிவி கொணொலி பதிவுகளின் அடிப்படையில் சந்தேகநபர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், ஒருவர் நேற்று மடக்கிப்பிடிக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது பொலிஸ் விசாரணையில் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-26)





# ஓடிக்கொண்டிருந்த ஓட்டோவில் பற்றிய தீ

தலைமன்னார், ஓக. 6

பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்றில் மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் காட்டாஸ்பத்திரி பகுதியில் திடீரெனத் தீ பற்றியது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. எனினும், அந்தப் பகுதியில் நின்றிருந்தவர்கள், தீயை அணைத்தனர். மின் ஒழுக்குக் காரணமாக தீ பற்றியிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (த-60)



# பொது இடங்களில் எச்சில் துப்பினால் தண்டனை

## கொரோனாத் தொற்றை தடுக்க இந்த நடைமுறை

மன்னார், ஓக. 6

கொரோனாத் தொற்றைத் தடுக்கும் வகையில், பொது இடங்களில் எச்சில் துப்புதல் உட்பட சில விடயங்கள் அவதானிக்கப்பட்டு அத்தகையவர்களுக்கு தண்டனை விதிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது என்று மன்னார் மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக துறைசார்ந்த அதிகாரிகளுடனான அவசர கலந்துரையாடல் மன்னார் மாவட்டச்செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதன் பின்னர், மாவட்டச் செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மாவட்டத்தில் அனைவரினதும் ஒத்துழைப்போடு கொரோனாத் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தோம். ஆனால், தற்போது கொரோனாத்தொற்று சடுதியாக அதிகரித்துள்ளது. எனவே, பொதுமக்களை மீண்டும் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு கட்டாயப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த விடயங்கள் தொடர்பாக பிரதேச சபையினர், நகர சபையினர் அதிகூடிய கவனம் எடுக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. என்று தெரிவித்தார். (த-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி செலுத்தலின் பின்னர் வைரஸ் பரவல் குறைவடையும்

## நாட்டை முடக்க சாத்தியமில்லை என்கின்றது அரசு

**கொழும்பு,ஓக.6**

**நாட்டில் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் வைரஸ் பரவும் வேகம் குறைவடையும் என்று நம்புகின்றோம். எனவே இனியும் நாட்டை முடக்குவது என்பது சாத்தியமில்லை என்று அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தடுப்பூசி வழங்கும் பணிகளை வினைத்திறனுடன் முன்னெடுத்து வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசு முழு மூச்சுடன் செயற்படுகின்றது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இறுதிக்குள் இரு கட்டங்களாக தடுப்பூசி வழங்கும் பணிகளை நிறைவுசெய்வதே எமது இலக்கு.

டெல்டா வைரஸ் பரவலுடன் கொவிட் வைரஸ் பரவல் அபாயம் நாட்டில் காணப்படுகின்றது என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும்.

இதற்கான பொறுப்பை சகலரும் ஏற்க வேண்டும். அரசு என்ற ரீதியில் நாம் உரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

எவ்வாறிருப்பினும் தற்போதுள்ள நிலையில் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டமே சிறந்த முறைமை என்று உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட சகல சுகாதார தரப்புக்களும் ஏற்றுக்கொண்டுள்ளன.

அதற்கமைய இலங்கையில் மிகவும் வினைத்திறனான வகையில் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் இரு மாதங்களுக்குள் இரு கட்டங்களாகவும் தடுப்பூசி வழங்கி நிறைவுசெய்யப்பட்டதன் பின்னர், குறிப்பாக 18 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கும் தடுப்பூசி வழங்கப்பட்ட பின்னர் வைரஸ் பரவல் வேகம் குறைவடையும்- என்றார். (ஓ.4)



# ஹிஷாலினிக்கு நீதி வேண்டும்

## ஜனாதிபதிக்கு ஆயர் கடிதம்

கொழும்பு,ஓக.6

மலையக் சிறுமி ஹிஷாலினியின் இறப்பு மற்றும் நடைபெற்றிருக்கக்கூடிய மோசடி தொடர்பில் விரைவானதும் பாகுபாடற்றதுமான விசாரணைகளை உறுதிப்படுத்தவேண்டும் என்று கோரி, மத்திய மாகாண கத்தோலிக்க ஆயர் மற்றும் கண்டி மறைமாவட்டம் பேரருட்திரு ஆயர் வியானி பெர்னாண்டோ ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவிக்கையில்,

நாட்டின் சட்ட கட்டமைப்பானது சிறுவர்களைப் பாதுகாக்க முடியாதது என்பது வெட்கக்கேடானது. சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படலுக்கு எதிராக நீண்டகால மற்றும் பரந்த கொள்கைத் திட்டங்கள் அவசியமாகும்.

ஹிஷாலினியின் இறப்பு மற்றும் நடைபெற்றிருக்கக்கூடிய மோசடி தொடர்பில் விரைவானதும், பாகுபாடற்றதுமான விசாரணைகளை உறுதிப்படுத்த வேண்டும். இந்த சம்பவத்தைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் பெறவோ அல்லது குறிப்பிட்ட ஒரு இனத்தையோ மதத்தையோ இழிவுபடுத்த வேண்டாம்.

இவ்வாறான சம்பவங்களை தெரியப்படுத்துவதன் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தலில் ஊடகங்களின் பங்களிப்பு அதிகரிக்கும். பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் தனியுரிமை மதிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றோம்.

மலையக சமூகத்தைச் சேர்ந்த சிறுவர்களின் கல்வியை உன்னிப்பாகக் கண்காணிப்பதோடு , பாடசாலை இடைவிலகலைத் தடுக்கவும் , இடைவிலகல் ஏற்பட்டால் மாணவர்களின் நல்வாழ்வையும், உரிமைகளையும் கண்காணிக்கவும் செயலூக்கமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். 18 வயதுக்கு உட்பட்ட எந்தவொரு சிறார்களும் வேலைக்கமர்த்தப்படக்கூடாது என்பதற்கான சட்ட சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.- என்றார். (ஒ.4)



# சமூக வலைத்தளங்களில் கண்காணிப்பு தீவிரம்

## அடுத்த வாரம் அறிக்கை

கொழும்பு,ஓக.6

சமூக வலைத்தளங்கள் தொடர்பான அறிக்கை, அடுத்த வாரமளவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம்- என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சிறுமி ஹிஷாலினியின் விவகாரம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெவ்வேறு கருத்துக்கள் வெளியிடப்படுகின்றமை தொடர்பில் வினவப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பவமொன்று தொடர்பில் வழக்குத் தொடரப்பட்ட பின்னர் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து கருத்துக்களை அல்லது நிலைப்பாடுகளைத் தெரிவிப்பதிலிருந்து விலகியிருக்க வேண்டும். ஆனால் சமூக வலைத்தளங்கள் தொடர்பில் சகலருக்கும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இது தொடர்பில் நீதி அமைச்சு மற்றும் ஊடக அமைச்சுகளுக்குமிடையில் நீண்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த வாரம் அல்லது இரு வாரங்களுக்குள் இது தொடர்பான அறிக்கையை நாம் அமைச்சரவையில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம் என்றார். (ஒ.4)

# நிர்க்கதியான இலங்கையர்களை நாட்டுக்கு அழைக்க நடவடிக்கை

கொழும்பு,ஓக.6

புதிய சுகாதார வழிகாட்டலுக்கமைவாக, வெளிநாட்டில் நிர்க்கதியுள்ள இலங்கையர்களை, நாட்டுக்கு அழைத்துவர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார், வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களை அழைத்துவருவதற்காக வெளிவிவகார அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் வெளிநாடுகளில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்களுக்கு அரசு வழங்கி வரும் உதவிகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரபு நாடுகள், தெற்காசிய நாடுகள், ஐரோப்பிய மற்றும் மத்திய ஆசிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு வர பலர் விண்ணப்பித்துள்ளனர். அதற்கமைவாக நாட்டுக்கு அழைத்துவர, சர்வதேச நாடுகளுக்கு இடையிலான விமானப் போக்குவரத்தும் இடம்பெற்று வருகின்றது. ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட சிலரை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.- என்றார். (ஒ.4)

# நாட்டின் வளங்கள் விற்பனையால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு,ஓக.6

நாட்டின் பொருளாதாரத்துக்கு தாக்கம் செலுத்தும் பிரதான வளங்களை விற்பனை செய்வதன் ஊடாக, தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக தெரிவித்தார். நாடாளுமன்றில் கெரவலபிட்டிய மின்நிலையம் குறித்து கேள்வி எழுப்பிய அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய ... மனே நாடு முழுவதும் இராணுவத்தை நிறுத்துவது அல்ல. பெறுமதியான வளங்களை அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலே.

கெரவலபிட்டிய யுகதனவி மின்சார உற்பத்தி நிலையம் அரச நிறுவனங்கள் பலவற்றுக்கு பங்கிடப்பட்டே நிர்வகிக்கப்படுகின்றது. இவற்றில் அரச திறைசேரியின் பங்குகளில் 40 வீத பங்கை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று புதிதாக ஒரு மின் உற்பத்தி நிலையத்தை கெரவலபிட்டியவில் உருவாக்கவும், அதன் மூலமாகவே 350 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லக்தனவி நிறுவனத்துடன் உடன்படிக்கை ஒன்றைச்செய்துள்ளனர் என்றும் தெரிய வருகின்றது.

இதன் மூலமாக எரிவாயு உற்பத்தி செய்யவும் அமெரிக்க நிறுவனம் தீர்மானித்துள்ளது. இத்தகைய செயற்பாடுகளால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லையா? என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் துறை ஊழியர்களுக்கான அடிப்படைச் சம்பளம் அதிகரிப்பு



**கொழும்பு,ஓக.6**

**வாழ்க்கைச் செலவைக் கருத்தில் கொண்டு தனியார் துறை ஊழியர்களுக்கான அடிப்படைச் சம்பளத்தை 10 ஆயிரத்தில் இருந்து 12 ஆயிரத்து 500 ரூபா வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் வேலையாள்களின் தேசிய குறைந்தபட்ச வேதன சட்டவரைவை சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை அதிகரிப்பது சௌபாக்கிய வேலைத்திட்டத்தில் ஜனாதிபதியின் வாக்குறுதியாகும். அதன் அடிப்படையிலேயே வேலையாள்களின் குறைந்தபட்ச வேதன சட்டவரைவில் திருத்தம் மேற்கொண்டு அடிப்படைச் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். குறிப்பாக தனியார் துறையினரின் சம்பளம் தொடர்பாக சட்ட ரீதியில் தீர்மானிக்கும் பிரதான மூன்று அடிப்படைகள் இருக்கின்றன.

அதற்கமைவாக தொழிலுக்கு இணையும்போது தொழிலாளர் மற்றும் தொழில் வழங்குநர்களுக்கிடையில் மேற்கொள்ளப்படும் சேவை ஒப்பந்தத்தில் இடம்பெறும் சம்பளம் தொடர்பான நிபந்தனைகள், புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான நிபந்தனை மற்றும் அரசமைப்பு ரீதியிலான சட்டம் ஆகியவை உள்ளடங்குகின்றன. அதனால் இந்தச் சட்டவரைவில் நிர்ணயிக்கப்படும் சம்பளத்தை விட, குறைந்த சம்பளம் வழங்க சட்டத்தில் அனுமதி இல்லை. இதனூடாக தனியார் துறை ஊழியர்களுக்கு மாதம் அடிப்படைச் சம்பளமாக 10 ஆயிரம் ரூபாவும், நாளாந்தச் சம்பளம் 600 ரூபாவும் வழங்கப்படுவதை சேவை வழங்குநருக்கு கட்டாயமாக்கி இருக்கின்றோம். 2016 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தில் 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. மேலும் 3 ஆயிரத்து 500 ரூபா நிவாரணம் வழங்கப்பட்டிருந்தது.

இதற்கு முன்னரும் 2 ஆயிரத்து 500 ரூபா வரவு செலவுத் திட்ட நிவாரணமாக வழங்கி இருந்தோம். அதுவும் இதனுடன் இணைத்துக் கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் சேவை வழங்குநர்கள் இந்த சட்டவரைவின் பிரகாரம் 16 ஆயிரம் அடிப்படைச் சம்பளமாக வழங்குவதற்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தனியார் துறையினருக்கு அடிப்படைச் சம்பளம் 10 ஆயிரம் ரூபா என்ற குறைந்த சம்பளம் நிர்ணயிக்கப்பட்ட பின்னர் இதுவரை அதிகரிக்கப்படவில்லை. என்றாலும் இந்த காலப்பகுதிக்குள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு நூற்றுக்கு 21 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அரச ஊழியர்களதும், தனியார் ஊழியர்களதும் சம்பளத்தில் பெரும் வித்தியாசம் காணப்படுகின்றது. அதனால் இந்த சம்பள அதிகரிப்பு நியாயமானதாகும். அதேவேளை வீட்டு வேலையில் இணைத்துக்கொள்ளப்படுபவர்கள் தொடர்பில் நாட்டில் முறையான சட்டம் இல்லை. அதனால் வீட்டு வேலையை அபாயகரமான தொழிலாக சட்டமாக்கி வர்த்தமானிப்படுத்த நாடாளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றேன். அத்துடன் வீட்டு வேலைக்கு அமர்த்தப்படுபவர்களின் வயதை 18 வரை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். இது தொடர்பாக பரந்துபட்ட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றோம்- என்றார். (ஒ.4)



## குடிதண்ணீர் வழங்கல் இடைநிறுத்தம்

கிளிநொச்சி,ஓக.6

இயந்திரம் பழுதடைந்ததன் காரணமாக ஐந்து நாள்களுக்கு மேலாக கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் குடிதண்ணீர் வழங்கல் தடைப்பட்டுள்ளது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

வடிகாலமைப்பு சபையால் கடந்த 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டத்தின் கீழ் 488 குடும்பங்களுக்கு தண்ணீர் வழங்குவது என திட்டமிடப்பட்டிருந்தது. தற்போது 250 குடும்பங்களுக்கே குடிதண்ணீர் வழங்கல் இடம்பெற்று வந்தது. இந்த நிலையில் கடந்த ஐந்து நாள்களுக்கு முன்னர் இயந்திரம் பழுதடைந்ததன் காரணமாக தண்ணீர் வழங்கல் இடம்பெறவில்லை. இதனால் அக்கராயன் மத்தி, கெங்காதரன் குடியிருப்பு, அக்கராயன் மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 250 குடும்பங்கள் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். (ஐ-13)

## ஐ.தே.கவின் ஊடகப்பிரிவுக்கு புதிய பொறுப்பாளர் நியமனம்

கொழும்பு,ஓக.6

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவின் பொறுப்பாளராக, இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்த குமார் நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன அவருக்கான நியமனத்தை வழங்கினார். ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அவருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ஒ.4)



# கெரவலபிட்டி மின் நிலையம் அமெரிக்காவுக்கு தாரைவார்ப்பு

கொழும்பு,ஓக.6

கெரவலபிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் திறைசேரிக்கு சொந்தமான 50 வீத பங்குகளில், 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சூரிய சக்தி, காற்று, நீர் மின் உற்பத்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக தெரிவித்தார்.

நாடாளுமன்றில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக, கெரவலபிட்டி மின் நிலையம் குறித்து கேள்வி எழுப்பியிருந்தார். இதற்குப் பதில் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கெரவலபிட்டி மின் உற்பத்தி நிலையத்தினூடாக எரிவாயு மற்றும் மின்சார உற்பத்தி என்பவற்றை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ள தீர்மானம் கேள்வி மனுக்கோரலுக்கு அப்பாற்பட்ட ஒன்றல்ல. அமெரிக்க நிறுவனத்தின் வேலைத்திட்டம் வேறு ஒன்றாகும். ஆகவே சந்தேகங்களைக் கொண்டு குழப்பமடைய வேண்டிய அவசியம் இல்லை. எமது வளங்களை வேறு நாடுகளுக்கு கொடுக்கும் நடவடிக்கை அல்ல இது. முறையாக கேள்வி மனுக்கோரலுக்கு அமையவும் சட்ட முறைமைகளுக்கு அமையவுமே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கான இருதரப்பு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதனை சபையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்போம். என்றார். (ஒ.4)

## யாழ்.போதனா மருத்துவமனைக்கு நவீன குருதி சுத்திகரிப்பு இயந்திரம்




கொழும்பு,ஓக.6

"எதிர்க்கட்சியிலிருந்து ஓர் மூச்சு" திட்டத்தின் ஊடாக, 23 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நவீன குருதி சுத்திகரிப்பு இயந்திரம் (டயாலிசிஸ் இயந்திரம் ) யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் பவனதராஜாவிடம், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இயந்திரத்தைக் கையளித்தார்.

கொரோனா பெருந்தொற்றால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் நோக்குடன், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் 'ஜன சுவய' கருத்திட்டத்தில் இணைந்து, "எதிர்க்கட்சியிலிருந்து ஓர் மூச்சு' நிகழ்ச்சித் திட்டதை நடைமுறைப்படுத்துகின்றனர்.

அதன் 22 ஆவது சமூக நலத்திட்டமாக இந்த இயந்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் யாழ். மாவட்ட அமைப்பாளர் திருமதி உமாசந்திரா பிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது ஊசி உடனே வேண்டாம் வறிய நாடுகளுக்கு அதனை பங்கிடுங்கள்

## உலக சுகாதார அமைப்பு கோரிக்கை



**ஜெனிவா, ஓக. 6**
**செல்வந்த நாடுகள் தங்கள் மக்களுக்கு மூன்றாவது தடுப்பூசியை வழங்குவதற்கு முன்னர் வறிய நாடுகளுக்குத் தடுப்பூசி கிடைக்க உதவவேண்டும். இவ்வாறு உலக சுகாதார நிறுவனம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.**

தங்களது பிரஜைகளில் பெரும் பங்கினருக்கு இரண்டு தடுப்பூசிகளை வேகமாக ஏற்றி முடித்த சில நாடுகள் அடுத்த கட்டமாக நோயாளிகள் மற்றும் பலவீனமான நிலைமையில் உள்ளவர்களுக்கு மூன்றாவதாக மேலும் ஓர் ஊசியை வழங்குவதற்கு ஆயத்தமாகி வருகின்றன. மிக வேகமாகப் பரவி வருகின்ற டெல்ரா வைரஸ், தடுப்பூசி ஏற்றியோருக்கும் தொற்றி வருவதால் பலவீனமான உடற்காப்பு சக்தி கொண்டோருக்கு மூன்றாவது தடுப்பூசி அவசியம் என்று மருத்துவ அறிவியலாளர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இஸ்ரேல், ஜேர்மனி போன்ற நாடுகள் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு ஓர் ஊக்கியாக மூன்றாவது தடுப்பூசியை ஏற்றுவதற்குத் தீர்மானித்துள்ளன. இந்த நிலையிலேயே அதனை நிறுத்துமாறு அல்லது தாமதிக்குமாறு உலக சுகாதார நிறுவனம் அதன் உறுப்பு நாடுகளைக் கேட்டிருக்கிறது.

சகல நாடுகளிலும் சனத்தொகையில் ஆகக் குறைந்தது பத்து வீதத்தினருக்காவது முதலாவது தடுப்பூசியை எதிர்வருகின்ற செப்ரெம்பர் மாத இறுதிக்குள் ஏற்றி முடிக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது. அதற்கு வசதியாக வளர்ந்த நாடுகள் மூன்றாவது தடுப்பூசித் திட்டத்தை செப்ரெம்பர் இறுதிவரை தாமதப்படுத்த வேண்டும் என்று சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானொம் கெப்ரேயஸிஸ் கேட்டுள்ளார்.

தங்களது மக்களை டெல்ரா வைரஸிடம் இருந்து பாதுகாத்துவிட வேண்டும் என்று நாடுகள் கொண்டுள்ள கவலையை, கரிசனையை ஏற்றுக்கொள்ள முடிகிறது.


ஆனால் உலகளாவிய தடுப்பூசி உற்பத்தியில் பெரும் பகுதியைத் தங்களது மக்களுக்குப் பயன்படுத்திய நாடுகள் அதன் பிறகும் ஊசியை தங்கள் தேவைகளுக்கு ஒதுக்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார். (த-இ)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 42,254 பேருக்கு தடுப்பூசி

முல்லைத்தீவு, ஓக. 6
முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 42 ஆயிரத்து 254 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தகவல் தெரிவித்துள்ளது.

கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, வெலிஓயா, மல்லாவி மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் கீழ் தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரை குறித்த மாவட்டத்துக்கு 50 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றின் அடிப்படையில் தொடர்ச்சியாக முதற்கட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4,19)



# தாதியர்கள் போராட்டம்: மருத்துவமனை முடக்கம்

வவுனியா, ஓக. 6
அரச ஊழியர்கள் அனைவரையும் வழமை போன்று பணிக்குத் திரும்புமாறு வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் தாதியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.


அரச நிறுவனங்கள் வழமைபோன்று செயற்படுவதுடன், அனைத்து ஊழியர்களும் பணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்து கடந்த 2 ஆம் திகதி புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாடளாவிய ரீதியிலுள்ள தாதியர் தொழிற்சங்கத்தினர் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதற்கு ஆதரவாக, வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைத் தாதியர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகள் முடங்கின. நோயாளர்களும் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்தனர். (ஒ-4,18)




# முதல் டோஸ் பெற்றவர்களுக்கு அடுத்த வாரம் இரண்டாம் டோஸ்



சாவகச்சேரி, ஜூலை 6
தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸ் பெற்ற அனைவருக்கும், எதிர்வரும் 9 , 10 ,11 ஆகிய திகதிகளில் இரண்டாம் டோஸ் ஏற்றப்படும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

கொடிகாமம், கைதடி, வரணி மருத்துவமனைகள் மற்றும் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபம் ஆகியவற்றில் தடுப்பூசி ஏற்றப்படும்.

தடுப்பூசியின் முதலாம் டோஸ் பெற்றவர்கள் தங்களுக்கென ஏற்கனவே வழங்கப்பட்ட அட்டையுடன், அந்தந்த நிலையங்களில் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள முடியும். ஏற்கனவே சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் தடுப்பூசி பெற்றவர்கள், நகரசபை பொன் விழா மண்டபத்தில் இரண்டாம் டோஸைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவித்துள்ளனர். (ஒ-4,9)

# ஆசிரியர்களுக்கு ஆதரவாக வடமராட்சியில் போராட்டம்

கொழும்பு, ஓக. 6
சம்பள முரண்பாட்டுக்கு எதிராக ஆசிரியர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் மற்றும் கொத்தலாவல சட்டவரைவுக்கு எதிராக இடம்பெறும் போராட்டம் ஆகியவற்றுக்கு வலுச்சேர்க்கும் வகையில் வடமராட்சியில் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பஸ் நிலைத்துக்கு முன்பாக எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10:30 மணிக்கு போராட்டம் இடம்பெறும் என்று வடமராட்சி ஆசிரியர் சேவை சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

தற்போதைய சூழலில் இணையக் கல்வி முறைமைக்கு சிமாட் தொலைபேசி கொள்வனவு செய்து, மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க முடியாத நிலைமையில் ஆசிரியர்கள் உள்ளனர். இதனைவிட மோசமான நிலையில் மாணவர்கள் உள்ளனர்.

ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு ஆடம்பர வாகனங்களைக் கொள்வனவுசெய்ய முனைகின்றனர். ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்கு மட்டும் நிதி இல்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஆசிரியர் சேவை சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ஒ-4,26)

# போராட்டங்களைத் தடுப்பதைவிட நிறுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள்

## மாவை அரசுக்கு ஆலோசனை

கொரோனாத் தொற்றுக் காலத்திலும் தங்களுக்குத் தீர்வு வேண்டி கல்விச் சமூகத்தினரால் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டங்களைத் தடுத்து நிறுத்துவதை விடுத்து, எதிர்வரும் காலத்தில் இவ்வாறான போராட்டங்கள் முன்னெடுக்க வாய்ப்புக்களை வழங்க வேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக, இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் அனுப்பப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், இலங்கை ஆசிரியர் சங்கமும் தொடர்புடைய ஏனைய தொழிற்சங்கங்களும் ஆசிரிய சமூகத்தின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் அத்துடன் கொத்தலாவல பல்கலைக்கழக சட்டவரைவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அரசு முயற்சிப்பதை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த 25 நாள்களாக நடைபெறும் போராட்டங்களை ஆதரித்து பல்கலை மாணவர் சமூகம், பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் அமைப்புக்கள் போராட்டங்களை நடத்துகின்றன. ஆனால் இவற்றுக்குத் தீர்வு வழங்காமல் அமைச்சர்கள் தொடர்ந்தும் பொறுப்பற்ற வகையில் இழுத்தடிப்புச் செய்கின்றன. இத்தகைய பிரச்சனைகளுக்குப் பொருத்தமான ஒரு தீர்வை தீர்மானிக்க அரசு தவறுவதால், கல்வித்துறையும் சீரழிந்து விடும். ஆசிரிய சமூகம் எதிர்கால சந்ததியை அறிவியல் சமூகமாக மாற்றும் தலைமைத்துவம் கொண்டிருப்பதை அரசு பொருட்படுத்தவில்லை. இதனால் அரசின்மீதும், எதிர்காலத்தின்மீதும் நம்பிக்கையற்ற ஒரு நெருக்கடி நிலையே தோற்றுவித்துள்ளது. போராட்டத்தில் கைதுசெய்யப்பட்டவர்களை உடன் விடுதலைசெய்ய வேண்டும். பொருத்தமான ஜனநாயக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். -என்றார். (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறவாதிருங்கள்!


வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் மருத்துவக் கவனிப்புத் தேவைப்படும் நபர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. இன்னும் சொல்லப்போனால் அந்த எண்ணிக்கை இரண்டு மடங்குக்கும் மேலாகச் சென்றுள்ளது. வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் கொரோனா தாண்டவமாடி வருகின்றது. கொழும்பு ராகம மற்றும் கராப்பிட்டிய மருத்துவமனைகள் கொரோனாத் தொற்றாளர்களின் திடீர் அதிகரிப்பையடுத்து அவசரகால நிலையை அறிவித்துள்ளன.

இலங்கையில் கொரோனாவின் அடுத்த பரவல் டெல்டா தொற்றை மையமாக வைத்து ஏற்படும். அவ்வாறு ஏற்பட்டால் அது இந்தியாவை விடவும் பாரதூரமான விளைவுகளை இலங்கைக்கு ஏற்படுத்தும் என்றெல்லாம் விடுக்கப்பட்ட எச்சரிக்கைகள் தற்போது படிப்படியாக மெய்ப்பட ஆரம்பித்துள்ளன. குறிப்பாக கடந்த இரு வாரங்களுக்குள்தான் இத்தகையதொரு பெரும் நெருக்கடிக்கு எமது மருத்துவத்துறை தள்ளப்பட்டுள்ளது.

இலங்கைக்கு தற்போது ஏற்பட்டுள்ள நிலை எவ்வாறு ஏற்பட்டது?, அது இனி எவ்வாறாகச் செல்லவுள்ளது? என்பதற்கு எம் கண்முன்னால் உள்ள மிகச் சிறந்த எடுத்துக்காட்டு இத்தாலி. இத்தாலியில் ஆரம்பத்தில் ஆங்காங்கே சில தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். ஆயினும் பயணத்தடைகளோ அல்லது கட்டுப்பாடுகளோ அங்கு விதிக்கப்படவில்லை. பகுதியளவிலான முடக்கங்கள்தான் விதிக்கப்பட்டன. இதனால் இத்தாலி பெரும் ஆபத்தைச் சந்திக்கும் என்று உலக சுகாதார நிறுவனம்கூட எச்சரித்தது. ஆனால், இதையெல்லாம் இத்தாலியர்கள் சட்டைசெய்யவில்லை. அது பின்னாளில் இத்தாலிக்காக உலகமே பிரார்த்தனை செய்யுமளவுக்கு நிலைமை பாரதூரமானது. ஒட்டுமொத்த இத்தாலியும் முடங்கியது. மருத்துவமனைகள் நிரம்பி வழிந்தன. வீடுகளில்வைத்து தொற்றாளர்களைப் பராமரிக்கும் அளவுக்கு மருத்துவமனைகளில் இடப்பற்றாக்குறை நிலவியது. இத்தாலி இறப்புக்களால் சூழப்பட்டது. ஆச்சரியப்படும் விதமாக இதுவெல்லாம் வெறும் 15 முதல் 21 நாள்களுக்குள் நடந்து முடிந்தது.

வெள்ளம் கடந்த பின்னர் அணை கட்டுவதைப்போன்று அனைத்தும் கரைதாண்டிய பின்னர்தான் இத்தாலியர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இதயசுத்தியுடன் பேணினார்கள். தற்போது இதே பயணம்தான் எம்முடையதுமாக இருக்கின்றது. கொரோனா ஒரு முனையில் கோரத்தாண்டவமாடி தீவிரம் பெற்று வருகின்றது. மறுமுனையில் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை நாம் படிப்படியாகக் கைவிட்டு வருகின்றோம். 'மாஸ்க்' ஒன்றை அணிவதைத் தவிர வேறு எதை நாங்கள் செயற்படுத்துகின்றோம்? என்று எம்மை நாமே சுய பரிசீலனை செய்துகொள்ள வேண்டும். துயரம் என்னவெனில் அரச திணைக்களங்களில்கூட இன்று நோய் நீக்கித் திரவம் பயன்படுத்துவது அரிதாகிவிட்டது. சமூக இடைவெளியென்பது இம்மியும் இல்லை. அச்ச உணர்வென்பது அறவேயில்லை. கொரோனாவின் அதுவும் டெல்டாவின் தீவிரப் பரவலுக்குரிய ஏதுநிலைகளை நாம் வலிந்து ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றோம். எதை விதைக்கின்றோமோ அதுதான் அறுவடையாகக் கிடைக்கும். எமக்குக் கிடைக்கப்போகும் அறுவடைக்கான முதல் கட்டம்தான் இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள்.

தயவுசெய்து பொறுப்புணர்ந்து செயற்படுங்கள். உலக வல்லரசுகள்கூட டெல்டாவால் மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன. அவ்வாறிருக்கையில் பொருளாதாரத்தில் நலிவு நிலையைக் கொண்டுள்ள இலங்கையால் எவ்வளவு தாக்குப்பிடிக்க – போராட முடியும் என்பதை சிந்தித்துப்பாருங்கள். மீண்டுவரக்கூடிய பின்புலம் இத்தாலிக்கு இருந்தது. இலங்கையில் அது இல்லை. அறவேயில்லை.




# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி, இழப்பீடு கிடைப்பது அவசியம்

## சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு,ஓக.6

**இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.**

11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டனர் என்று கூறப்படும் வழக்கில், வசந்த கரன்னகொடவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளைத் தொடர வேண்டாம் என்று சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் விளக்கம் கோரி, சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசிபிக் பிராந்தியப் பணிப்பாளர் யாமினி மிஸ்ரா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல தசாப்தங்களாக பல்லாயிரக்கணக்கான மக்கள் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட நிலையில், உலகின் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான கட்டாய காணாமல் ஆக்கல் நாடுகள் பட்டியலில் இலங்கை உள்ளது.

இந்த வழக்கு, சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கு நீதி வழங்குவதற்கான வாய்ப்பாக இருந்தது. குற்றவியல் பொறுப்பில் சந்தேகத்துக்குரியவர்கள், உதவி, ஊக்குவிப்பு மற்றும் கட்டளைப் பொறுப்பின் கீழ் சம்பந்தப்பட்டவர்கள் உட்பட சம்பந்தப்பட்டோர் விசாரணைக்குக் கொண்டு வரப்படுவதை உறுதிசெய்தது.

இந்த வழக்கு ஏற்கனவே இலங்கை நீதிமன்றங்களில் உள்ள தடைகளால் சூழப்பட்டுள்ளது. தற்போதைய முடிவு பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதியை மேலும் சென்றடைவதை தடுக்கின்றது. சட்டமா அதிபர் திணைக்களம் அதன் முடிவுக்கான காரணங்களை விளக்க வேண்டும். இலங்கை அதிகாரிகள் காணாமல் ஆக்கப்பட்ட அனைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கும் உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளை வழங்க வேண்டும்.- என்றார். (ஒ.4)

# ஆர்ப்பாட்டத்தில் கைதானவர்களை பார்வையிட எதிர்க்கட்சிக்கு மறுப்பு

கொழும்பு,ஓக.6

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஆசிரியர்களைப் பார்வையிடச்சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான குழுவினருக்கு பொலிஸார் அனுமதி வழங்கவில்லை.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது 22 ஆண் ஆசிரியர்கள், 16 பெண் ஆசிரியர்கள் மற்றும் 6 தனிநபர்கள் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

சட்டவிரோத மக்கள் ஒன்றுகூடலில் கலந்துகொண்டமை, பிரதான வீதியை முடக்கியமை மற்றும் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு கோரி ஆசிரியர் மற்றும் முதன்மை தொழிற்சங்கங்கள்



இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களை எதிர்க்கட்சியினர் பார்வையிடச் சென்றனர். எனினும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

"ஒரு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு பொலிஸ் நிலையத்துக்குள் நுழைய அனுமதிக்காவிட்டால், நாட்டில் என்ன ஜனநாயகம் உள்ளது" என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கவலை வெளியிட்டுள்ளார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து அரச பணியாளர்களை பணிக்கு அழைத்தமைக்கு எதிராக முறைப்பாடு

**கொழும்பு, ஓக. 6**

**கொரோனாப் பெருந்தொற்றுக்கு மத்தியில் அனைத்து அரச ஊழியர்களையும் பணிக்கு திரும்ப அழைக்கும் முடிவின் காரணமாக, கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்கள் உட்பட பல தரப்பினர் ஆபத்தில் இருக்கின்றன என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் சந்தன சூரியராச்சி மேற்படி முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

அனைத்து ஊழியர்களையும் பணிக்கு அழைக்கும் அரசின் முடிவின் காரணமாக, சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டியவர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளன. தற்போது கொரோனாத் தொற்று வேகமாக பரவி வருகிறது என சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளனர் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

சுழற்சி முறையில் ஊழியர்களை பணிக்கமர்த்தும் சுற்றறிக்கையை இரத்துசெய்து, அனைத்து அரச துறை ஊழியர்களையும் பணிக்கு அழைக்கும் சுற்றறிக்கைக்கு எதிராக, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை பல்வேறு தரப்பினருக்கு குறிப்பாக கரப்பிணிப் பெண்களுக்கான சிறப்பு ஏற்பாடுகளையும் நீக்கியுள்ளது. இதன் விளைவாக, பல்வேறு தரப்பினர் கடுமையான ஆபத்தில் இருக்கின்றன என அவர் கூறியுள்ளார். (ஒ.இ)

---

கோணாவில் பகுதியில்

## தடுப்பூசி நிலையத்தை அமைத்துத்தாருங்கள்

*அப்பகுதி மக்கள் கோரிக்கை*

கிளிநொச்சி,ஒக.6

கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயத்திலும் கொவிட் 19 தடுப்பூசி வழங்கும் நிலையத்தை அமைத்துத் தாருங்கள் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கோணாவில் கிராம மக்களும் அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு சென்றே தடுப்பூசியை பெற்றுவருகின்றனர்.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் ஆயிரத்து 100 வரையான குடும்பங்கள் வாழ்கின்றன.

குறித்த பகுதியில் கொவிட் 19 தடுப்பூசி நிலையம் உருவாக்கப்படாததன் காரணமாக போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அக்கராயன் மகா வித்தியாலயத்துக்குச் சென்றே தடுப்பூசியை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் கோணாவில் பகுதி மக்களின் நலன்கருதி கோணாவில் மகா வித்தியாலயத்தில் கொவிட்- 19 தடுப்பூசி வழங்கும் நிலையத்தை அமைத்துத் தரும்படி கோரிக்கை விடுக்கின்றோம் என்றனர். (ஐ-13)

---

## பூஞ்சை நோய் பரவல் தொடர்பில் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 6

டீனியா என்கிற ஒருவித பூஞ்சை நோய் இலங்கை மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தத் தொடங்கியிருக்கின்றது. இது கொரோனா தொற்றுடன் நேரடியாக தொடர்புபடாத போதிலும் அறிகுறிகள் ஏற்படும் பட்சத்தில் மருத்துவர்களை நாடும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள், மிருகங்கள் என பலருக்கும் இந்த தோல் நோய் பரவக்கூடிய அபாயம் உள்ளது. விரல், தலை என பல்வேறு இடங்களிலும் தொடர் அரிப்பு நிலைமையை ஏற்படுத்தும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ஒ.இ)

---

## தடுப்பூசி பெறச்சென்ற முதியவர்களுக்கு ஏமாற்றம்

கிளிநொச்சி,ஒக.6

இரண்டாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ளச் சென்ற 100 இற்கு மேற்பட்ட முதியவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

கடந்த மாதம் 6 ஆம் திகதியும் அதனை அண்டிய சில நாள்களும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதலாவது கொவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டது. இதன் போது இரண்டாவது தடுப்பூசிக்கான திகதி அறிவிக்கப்பட்டது.

முதியவர்கள் தடுப்பூசி அட்டையில் குறிப்பிட்ட 5 ஆம் திகதியான நேற்றையதினம் தங்களுக்கான இரண்டாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ள கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு காலை 6 மணி முதல் சென்றுள்ளனர். இவ்வாறு சென்ற நூற்றுக்கணக்கான முதியவர்கள் காலை 9 மணி வரை மத்திய கல்லூரி மண்டபத்தில் காத்திருந்தனர். இதன்போது தடுப்பூசி செலுத்துவதற்கான எவ்வித ஏற்பாடுகளும் இடம்பெறவில்லை.

சம்பவ இடத்துக்கு வந்த இராணுவத்தினர், இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் 7 ஆம் திகதிக்கு பின்னர் ஏற்றப்படும் எனவும். இது தொடர்பான அறிவித்தல் சுகாதாரத் துறையால் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார பிரிவு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, இச் சம்பவம் தொடர்பில் தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், முதலாவது தடுப்பூசியை 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இராணுவத்தினரே செலுத்தினார்கள் எனவே அவர்களே இவர்களுக்கு பதில் அளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர். (ஐ-113,214)



---



## கொரோனா செயலணியை உடன் கலையுங்கள்

*ரணில் வலியுறுத்து*

கொழும்பு, ஓக. 6

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துவரும் நிலையில், நிலைமை மிகவும் மோசமடைந்து வருகின்றது. தற்போது உருவாக்கப்பட்டுள்ள கொரோனா செயலணியை கலைத்துவிட்டு, அமைச்சரவை ஊடாக விசேட குழுவொன்றை நியமித்து கொரோனா விடயங்களை அரசு கையாளவேண்டுமெனவும், இல்லையெனில் பல உயிர்கள் செத்து மடிவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போது மருத்துவமனைகளில் கொரோனா நோயாளர் விடுதிகளில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. எனவே, இராணுவம் மற்றும் இராணுவ பொறியியல் பிரிவினரின் உதவியுடன் தற்போது உள்ள மருத்துவமனைகளுக்கு அருகிலேயே புதிய மருத்துவமனைகளையோ அல்லது மருத்துவமனை கட்டட வசதிகளையோ அதிகரிக்குமாறும் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற சபையில் குறிப்பிட்டார்.

சுனாமி காலத்திலும் இலங்கைக்கு ஏற்பட்ட பாதிப்பை ஓரிரு வாரங்களில் அரசு சிறப்பாக கையாண்டு மக்களுக்கு நிவாரணமும் வழங்கியிருந்தது. அதேபோன்று கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தவும் புதிதாக நிதி ஒதுக்கீடு செய்தேனும் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தார்.

நாங்கள் கொரோனா பிரச்சினையை அரசியலாக்கவில்லை. ஆனால் இப்போது இதை அரசியல் ரீதியாகவே தீர்க்கவேண்டியுள்ளது எனவும் குறிப்பிட்டார். (ஒ.இ)

---

## போலி நாணயத் தாள்களுடன் சுதந்திரபுரத்தில் பெண் கைது

முல்லைத்தீவு,ஒக.6

போலி நாணயத்தாள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் சுதந்திரபுரம் கொலனி பகுதியில் பெண் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த பெண் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


சந்தேகநபரிடமிருந்து 500 ரூபா போலி நாணயத்தாள்கள் 17 கைப்பற்றப்பட்டதுடன்,மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவால் மருத்துவமனைகள்: அவசரநிலையை பிரகடனம்

கொழும்பு, ஓக. 6

கொரோனா நிலைமையை கருத்திற்கொண்டு காலி மற்றும் இரத்தினபுரி மருத்துவமனைகளில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.



மருத்துவமனைகளில் நிலவும் சூழ்நிலையை கருத்திற்கொண்டு இவ்வாறு அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ள இரத்தினபுரி மருத்துவமனையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொவிட் தொற்றாளர்கள் அதிகரித்துள்ளமையாலும் மருத்துவமனைகளில் கடமையாற்றும் பலருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையாலும் இவ்வாறு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன என்று காலி மருத்துவமனையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-இ)





## அம்பலப்பெருமாள் குளத்தின் சீரமைப்புப் பணி ஆரம்பம்


முல்லைத்தீவு, ஓக. 6

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தின் சீரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவின் கீழ் உள்ள இக் குளம் 35 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டு வருகிறது. அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் 600 ஏக்கர் வரையான நெற்செய்கை நிலம் காணப்படுகின்றது. இக்குளத்தை நம்பி 110 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. (ஐ-13)

## டெல்டாவால் தொற்றுக்குள்ளாவோரே நாட்டில் தற்போது மிக அதிகம்

கொழும்பு, ஓக. 6



இலங்கை முழுதும் திரிபடைந்த டெல்டா வைரஸ் பரவியுள்ளமையால் அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் என்று சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அண்மைய நாள்களில் அடையாளம் காணப்படும் கொவிட் தொற்றாளர்களில் அதிகமானோர் டெல்டா தொற்றாளர்கள் என்று சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சந்திம ஜீவன்தர தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகளின் பரிசோதனைகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளதென அவர் குறிப்பிட்டார். 94 மரபணு மாதிரிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட பரிசோதனைகளில் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களில் அதிகமானோர் டெல்டா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள்.

இது தொடர்பான முக்கிய அறிக்கை ஒன்று சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

## சிறைக் காவலர் கைது

கொழும்பு, ஓக. 6

வெலிக்கடைச் சிறைச்சாலையினுள் கைத்தொலைபேசி மற்றும் பட்டரி ஒன்றை எடுத்துச்செல்ல முற்பட்ட சிறைச்சாலை காவலரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபரின் பாதணிக்குள் மறைத்து வைத்திருந்த நிலையில் இவ்வாறு குறித்த பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட சிறைச்சாலை காவலரை மேலதிக விசாரணைகளுக்காக பொரள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.இ)





## கொடிப்பீடம் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி, ஓக. 6

கிளிநொச்சி சோரன்பற்று சி.சி.த.க பாடசாலையில் சரஸ்வதி வணக்கஸ்தலத்துக்கான கொடிப்பீடம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் நடராசா ராமதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன், சபை உறுப்பினர் த.ரமேஸ், ஆசிரியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சரஸ்வதி வணக்கஸ்தலத்தை ஓய்வுநிலை அதிபர் தாமோதரம்பிள்ளை பராசக்தி குடும்பத்தினரும், கொடிப்பீடத்தை கரந்தாய் பழைய மாணவன் வாகீசன் சந்திரமோகனும் அன்பளிப்பு செய்தனர். (ஐ-159)

# எரிவாயு தட்டுப்பாட்டால் மக்கள் கடும் அவதி

கொழும்பு, ஓக. 6



நாடு முழுவதும் எரிவாயு தட்டுப்பாடு நிலவுகின்றமையால் மாற்று வழிகள் இன்றி நுகர்வோர் மிகப்பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாட்டில் நிலவும் டொலர் பற்றாக்குறை காரணமாக லாஃப்ஸ் நிறுவனம் எரிவாயு இறக்குமதியை மட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளமையை அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்தமையை அடுத்து இலங்கையிலும் எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு எரிவாயு நிறுவனங்கள் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தன. எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு அரசால் அனுமதி வழங்கப்படவில்லை.

மேலும் டொலர் பற்றாக்குறை நிலவுகின்ற நிலையில் கடன் உறுதி கடிதத்தை திறப்பதற்கு இடைவிதிக்கப்பட்டுள்ளமையால், லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் எரிவாயு இறக்குமதி செய்வதில் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதாக அறிவித்திருந்தது.

இதனையடுத்து, லாஃப்ஸ் நிறுவனம் எரிவாயு இறக்குமதியை நிறுத்துவதற்கு தீர்மானித்தால், அதற்கான கேள்வியை நிரப்புவதற்கு லிட்ரோ நிறுவனத்துக்கு முடியும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் அரச தகவல் திணைக்களத்தின் ஊடாக கடந்த ஜூலை 20ஆம் திகதி அறிவித்திருந்தார்.

எனினும், லாஃப்ஸ் எரிவாயுக்கு பதிலாக லிட்ரோ எரிவாயு கொள்கலனை விநியோகிக்குமாறு நிறுவனத்திடமிருந்து தமக்கு அறிவிக்கப்படவில்லையென லிட்ரோ விநியோக முகவர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 10 மாவட்டங்களில் டெங்கு அபாயம்



**கொழும்பு, ஓக. 6**
**நாட்டில் டெங்கு அபாயமிக்க 10 மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.**

இவ்வாறு தேசிய டெங்கு ஒழிப்பு பணியகத்தின் சமூக வைத்திய நிபுணர் ஹிமாலி ஹேரத் குறிப்பிட்டார்.

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய வானிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என அவர் கூறியுள்ளார். ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 10 ஆயிரத்து 30 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் அதிகளவானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, குருநாகல், இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை ஆகிய 10 மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் பரவும் வீதம் அதிகரித்துள்ளது என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ.இ)

## தடுப்பூசி பெற்றோருக்கு டிஜிற்றல் தர சான்றிதழ்

கொழும்பு.ஓக.6
கொழும்பு 1 தொடக்கம் 15 வரையில் வசிப்பவர்களில் கொரோனாத் தடுப்பூசி பெற்றவர்களுக்கு டிஜிற்றல் தரத்திலான சான்றிதழ் வழங்கப்படும் என்று கொழும்பு மாநகர சபை தெரிவித்துள்ளது.

இந்தச் சான்றிதழைப் பெற விரும்புவோர் epidunitcmc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விபரங்களை அனுப்ப வேண்டும்.

அதற்கமைவாக தடுப்பூசி அட்டையின் இருபுறம், தே.அ. இலக்கம் அல்லது கடவுச்சீட்டின் இருபுறம், தொடர்புகொள்ளும் இலக்கம் உள்ளிட்ட விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

சான்றிதழ் தயாரானவுடன் அது பெறுநருக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு கோரிக்கையின் பேரில் தடுப்பூசி சான்றிதழ் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தடுப்பூசி அட்டை, கடவுச்சீட்டு மற்றும் தேவையான பிற ஆவணங்களை தனிநபர் சமர்ப்பித்தவுடன், அவர்களுக்கான சான்றிதழ் அருகிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினூடாக வழங்கப்படும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமாந்த ஹேரத் தெரிவித்துள்ளார். (ஒ,4)

## இடைநிலை மருத்துவ சேவையாளர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிப்பு

கொழும்பு. ஓக. 6
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இடைநிலை மருத்துவ சேவையாளர்கள், தாதியர்கள் உள்ளிட்டோர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் வரை இந்த தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என்று அரச தாதியர்கள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

இதனிடையே, சுகாதார சேவைகள் தொழிற்சங்கத்தினரின் பணிப்புறக்கணிப்பு காரணமாக மருத்துவமனை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (ஒ.இ)

முல்லைத்தீவில்

## இரண்டாவது தடுப்பூசிக்காக காத்திருக்கும் முதியோர்கள்!

முல்லைத்தீவு,ஒக.6
முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவது தடுப்பூசியைப் பெற்ற 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இரண்டாவது தடுப்பூசியை பெறுவதற்காக காத்திருக்கின்றனர்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி கடந்த மாதம் ஏற்றப்பட்ட நிலையில் நேற்றையதினம் 5 ஆம் திகதி இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேபோல் ஆசிரியர்களுக்கும் இரண்டாம் கட்ட தடுப்பூசி நடவடிக்கைகளுக்கு திகதி அறிவிக்கப்பட்டது.

இருந்தும் இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்துக்கான இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரத் துறையினருடன் தொடர்புகொண்டு கேட்டபோது,



இரண்டாம் கட்ட தடுப்பூசிக்கான ஊசிகள் இதுவரை கிடைக்கவில்லை எனவும், இந்த வாரமளவில் அவை கிடைப்பதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவும், அவை கிடைத்ததுடன் இது தொடர்பான அறிவிப்பு விடுக்கப்படும் எனவும் தெரிவித்தனர். (ஐ-19)



## பாறை விழுந்து பெண் உயிரிழப்பு

கொழும்பு,ஓக.6
கல்குவாரியில் பாறைகளை உடைத்துக்கொண்டிருந்தபோது, வீதியால் பயணித்த பெண் ஒருவர் பாறையில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தோனிகல, பதவியாவில் நடந்துள்ளது.

ஒரு சிலர் பாறைகளை உடைத்துக் கொண்டிருந்த போது. பாறையின் ஒரு பகுதி, வீதியால் மோட்டர் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணைத் தாக்கியுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த பெண் பதவியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ஒ.4)

# கால்பந்து சம்மேளனத்தில் பல்வேறு நிதி முறைகேடு

### கோப் குழு விசாரணை

கொழும்பு.ஓக.6
கால்பந்து சம்மேளனத்தில் இடம்பெற்றுள்ள பல்வேறு நிதி முறைகேடுகள் தொடர்பில், அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப்) விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இது தொடர்பான கூட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

களுத்துறை கால்பந்தாட்ட மைதானத்தை நிர்மாணிப்பது தொடர்பில் இத்தாலி கால்பந்தாட்ட வீரர்களின் சங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட நிதி, ஆசிய கால்பந்தாட்ட நிதி, தனியார் நிறுவனம் ஒன்றால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 20 வீடுகளை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட நிதி, ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட நிதி என்பவை கால்பந்து சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் மணிலால் பர்னாந்துவால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் குழுவால் கவனம் செலுத்தப்பட்டது. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் விசாரணைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்த விடயங்கள் தொடர்பில், உள்ளக விசாரணை மேற்கொண்டு, அதன் அறிக்கையை துரிதமாக கோப் குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறு, விளையாட்டு அமைச்சின் செயலாளர் அனுராத விஜேகோனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கால்பந்து சம்மேளனத்தின் முன்னாள் நிதி முகாமையாளரால் போட்டி நடுவர்களாக போலி நபர்களை உள்ளடக்கி பெருமளவு நிதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த நிதி இதுவரை அறவிடப்படாமை குறித்து குழு அதிருப்தியை வெளியிட்டது. இது தொடர்பில் கண்டறிந்து உடனடியாக குழுவுக்கு அறிவிக்குமாறும் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கால்பந்து சம்மேளனத்தின் நிறைவேற்று சபைக்கு 10 அங்கத்தவர்கள் தேர்தல் மூலம் நியமிக்கப்படுகின்ற போதிலும், அதற்கு மேலதிகமாக 18 அங்கத்தவர்கள் தலைவர் மூலம் நியமிக்கப்படுகின்றமை அறியப்பட்டுள்ளது. எனவே சம்மேளனத்தின் யாப்பை திருத்தும் வரை அந்த வெற்றிடங்களை நிரப்பாமல் இருக்குமாறும் குழு பரிந்துரைத்துள்ளது. என்றுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் உணவுத் தேவைக்காகவே வடக்கில் விவசாயப் பண்ணைகள்

## அரசின் திட்டத்தை விபரிக்கின்றார் சமல்



**கொழும்பு,ஓக.6**

**நாட்டுக்குத் தேவையான உணவுகளை உற்பத்திசெய்து, மக்களுக்கு வழங்கும் நோக்குடனே வடக்கு மாகாணத்தில் விவசாயப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று நீர்பாசனத்துறை அமைச்சரும், உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ச தெரிவித்தார்.**

வடக்கு மாகாணத்தில் சிவில் பாதுகாப்புப் படைகளின் கீழ் இயங்கும் விவசாயப் பண்ணைகள் குறித்து நாடாளுமன்றில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் விவசாயப் பண்ணைகளை சிவில் பாதுகாப்பு படையணி நடத்திவருவது உண்மையே. இதன் நோக்கம் மக்களின் உணவுத் தேவையே.

மன்னார் மாவட்டத்தில் வெள்ளாங்குளம் பிரதேசத்தில் உள்ள நூறு ஏக்கர் நிலப் பரப்பில் இலங்கை இராணுவம் விவசாய பண்ணைகளை நடத்தி வருகின்றது. புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கம்- என்றார். (ஒ.4)

# சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் நிர்ணயம்

கொழும்பு,ஓக.6

உயர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளுக்கு, குறிப்பிட்ட திகதியை நிர்ணயிக்க நீதிச் சேவைகள் ஆணைக் குழுவுடன் நடைபெற்ற பேச்சின் பின்னர், உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் முதித விதானபத்திரன தெரிவித்தார்.

நாடாளுமன்றில், பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்காகவும், அந்த வழக்குகளை அடையாளம் காணும் முறையை வகுப்பதற்காகவும் நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் சுற்றறிக்கை, ஜூன் மாதம் 28ஆம் திகதியன்று அனைத்து உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவர்களை நீதிமன்றுக்கு வரவழைக்காமல் பிற தொலைதூர இடங்களில் தொடர்புடைய ஆதாரங்களை வழங்க, ஒவ்வொரு மாகாணத்திலும் 9 நிகழ்நிலை வடிவிலான பதிவு மையங்களை அமைக்க அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த இடங்களில் நேரடி சாட்சிப் பதிவு மையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ஒ.4)

# 53,266 பேர் கைது 7,000 பேர் மீது வழக்கு

கொழும்பு, ஓக.6

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 53 ஆயிரத்து 266 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 7 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதே குற்றச்சாட்டுக்களில் நேற்று அதிகாலை 6 மணி வரையிலான காலப்பகுதியில் 123 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை இதுவரை கைது செய்யப்பட்டவர்களில் 45 ஆயிரத்துக்கும் அதிகமானோர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)

# இரசாயன உர இறக்குமதி கோத்தாபய- பஸில் மோதல்

## சேதன உரப் பயன்பாட்டில் மாற்றமில்லை என்று அரசு அறிவிப்பு

கொழும்பு,ஓக.6

இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கு எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை. விவசாயத்துக்கு சேதன உரத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மேற்கொண்ட கொள்கை ரீதியான தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. எதிர்காலத்திலும் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்று அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விவசாயத்துறை அமைச்சரால் 2021ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட, இயற்கைக் கனிமங்கள் மற்றும் கிலேடட் நுண்தாவர ஊட்டக் கூறுகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட தாவர ஊட்டக்கூறுகளை இறக்குமதி செய்வதற்கான, முன்மொழிவுக்கே, அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருந்தது.

விவசாயத்துறை அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, 2226/48ஆம் இலக்க வர்த்தமானி திருத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில், நிதி அமைச்சரால் ஜூலை மாதம் 30ஆம் திகதி வெளியிடப்பட்ட, இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) விதிகளுக்கேற்ப, பின்வரும் வகைகளிலான விசேட உர இறக்குமதிக்கு மட்டும் விவசாயத் திணைக்களம், சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களின் ஊடாக, விசேட அனுமதிப்பத்திர முறைமையின் கீழ் அனுமதியளித்துள்ளது.


விவசாயத்துக்காக பயன்படுத்தப்படக்கூடிய உரமானது, சர்வதேச சேதன உர நியமங்களுக்கு ஏற்ப, அனுமதியளிக்கப்பட்டுள்ள சேதன உரங்கள் மட்டுமேயாகும்.

விவசாயத் திணைக்களம், தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளின் பிரகாரம். அந்த நிறுவனங்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் ஆறு மாதங்களுக்காக வழங்கும் அனுமதிப் பத்திரங்களின் ஊடாக, பச்சை வீட்டு முறைமையினுள் பாதுகாப்பான விவசாய நடவடிக்கைகளுக்காகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கும் மற்றும் நீர்த்தாவர வளர்ப்பு, காற்றில் வளரும் தாவரம் மற்றும் மலர் வளர்ப்பு நடவடிக்கைகளுக்காக மட்டும் நைட்ரஜன் கனிமங்கள் அல்லது இரசாயன உரம் மற்றும் கிலேடட் செய்யப்பட்ட கனிமங்கள் மற்றும் நுண் தாவர ஊட்டக் கூறுகளை இறக்குமதி செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்த அனைத்து உரங்களதும் இறக்குமதி, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஊடாக, தேவைக்கு ஏற்ப அல்லது குறித்த தேவைகளுக்கு பொருத்தமான வகையில் மட்டும் வழங்கப்படும் விசேட அனுமதிப் பத்திரத்தின் கீழ் மட்டும் இறக்குமதிசெய்ய அனுமதி உள்ளது. இதற்கு மேலதிகமாக, நைட்ரஜன் சேதன, கனிம வகை பொட்டாசியத்தை இறக்குமதி செய்யமுடியுமென்பதுடன், அவை இரசாயன உரமாக வகைப்படுத்தப்பட மாட்டாது. ஆரோக்கியமான மற்றும் வினைத்திறனான பிரஜைகளை உருவாக்குவதற்கு, அரசால் நச்சுத்தன்மையற்ற உணவுக்கான மக்களின் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும்.

அடுத்த 10 ஆண்டுகளில், இலங்கையில் விவசாயத்துறைக்கு முழுமையாக சேதன உரத்தைப் பயன்படுத்துவதற்கு, அதன் உற்பத்தியை விரைவுபடுத்த வேண்டும் என்பதே, சுபீட்சத்தின் நோக்குகொள்கைத் திட்டத்தின் உறுதி மொழியாகும்- என்றுள்ளது.

இதேவேளை நாட்டில் இரசாயன உரம் இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கடிதம் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவால் கையொப்பமிட்டு வங்கிகளின் பிரதானிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதற்கமைவாக ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் இரசாயன உரம் இறக்குமதி செய்யக்கூடிய அளவிலான ஏற்பாடுகளை நிதி அமைச்சு முன்னெடுத்துள்ளது. (ஒ.4)



# இலங்கை- ரஷ்யா இடையே கூட்டு சுற்றுலாத் திட்டம்

கொழும்பு,ஓக.6

இலங்கை மற்றும் ரஷ்யாவுக்கு இடையில் கூட்டு சுற்றுலாத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக ரஷ்ய சுற்றுலாப் பயணிகளிடையே இலங்கையை ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத்தலமாக அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ரஷ்ய அரசு அறிவித்துள்ளது.

ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ரஷ்ய கூட்டமைப்பின் சுற்றுலா அமைப்பின் துணைத் தலைவர் எலெனா வி லைசென்கோவா தலைமையிலான சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினரைச் சந்தித்தார்.

இதன்போது இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் பின்பற்றும் சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பில் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

இதேவேளை மொஸ்கோ கொழும்புக்கு இடையிலான நேரடி விமான சேவைகளுக்கான பயணச்சீட்டுகளின் விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மற்றும் மொஸ்கோவின் டொமோடெடோவோ விமான நிலையம் ஆகியவற்றுக்கு இடையேயான சேவையும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வேதாளம் பட ரீமேக்கில் கீர்த்தி சுரேஸ்



அஜித்குமார் நடித்த வேதாளம் படம் தெலுங்கில் ரீமேக் ஆகிறது. இதில் அஜித் வேடத்தில் சிரஞ்சீவி நடிக்கிறார். முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க கீர்த்தி சுரேஸ் நடிக்கவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழில் வேதாளம் படத்தில் அஜித் ஜோடியாக சுருதிஹாசனும், தங்கை கதாபாத்திரத்தில் லட்சுமிமேனனும் நடித்து இருந்தனர்.

தெலுங்கு வேதாளத்தில் லட்சுமி மேனன் கதாபாத்திரத்தில் கீர்த்தி சுரேஷ் நடிக்க வாய்ப்பு உள்ளது எனக் கூறப்படுகிறது.

கீர்த்தி சுரேஷ் ஏற்கனவே ரஜினியுடன் 'அண்ணாத்த' படத்தில் நடித்து முடித்துள்ளார். இயக்குநர் செல்வராகவன் நடிகராக அறிமுகமாகும் 'சாணிக் காயிதம்' படத்திலும் நடித்துள்ளார். இது தவிர தெலுங்கில் மகேஷ் பாபு ஜோடியாக 'சர்காரு வாரி பாட்டா', மலையாளத்தில் அரபிக்கடலண்டே சிம்ஹம், வாசி ஆகிய படங்களில் நடித்துவருகிறார்.



# இணையத்தில் வைரலாகும் டோனியின் சிகை அலங்காரம்

கிரிக்கெட் வீரர்களிலேயே சிகை அலங்காரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வீரர் யார் என்று கேட்டால், எல்லோரும் எம்.எஸ்.டோனி என்றே சொல்வார்கள். ஐக்கிய அரபு அமீரகத்தில் 2021 ஐபிஎல் இரண்டாம் கட்டப் போட்டிகள் செப்ரெம்பரில் நடைபெற உள்ள நிலையில், புதிய கெட்டப்புக்கு மாறியிருக்கிறார் டோனி. இந்த ஒளிப்படங்கள் தற்போது வைரலாகியிருக்கின்றன.

சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான போது நீண்ட தலை முடியுடன் காணப்பட்ட எம்.எஸ்.டோனி, பின்னர் குட்டை முடி, மொட்டைத் தலை, மொஹாக் தலை (கவுண்டமணியார் பாணியில் கீரிப் புள்ளை தலை), ஸ்பைக் தலை, மேச்சோ தலை என விதவிதமான சிகை அலங்காரத் தோற்றங்களுக்கு மாறியிருக்கிறார். அந்த வகையில் தற்போது 'ஃபாக்ஸ் ஹாக்' என்கிற புதிய சிகை அலங்காரத்துக்கு மாறியிருக்கிறார் எம்.எஸ்.டோனி இதுநாள் வரை சிகை அலங்காரத்தில் மட்டுமே வித்தியாசம் காட்டிக்கொண்டிருந்த டோனி, தற்போது ரேஸர்ஷார்ப் என்கிற தாடி, மீசை தோற்றத்திலும் வித்தியாசம் காட்டி புதிய கெட்டப்புக்கு மாறியிருக்கிறார். இந்த ஒளிப்படங்கள் அனைத்துமே இணையத்தில் ஹிட் அடித்துள்ளன.




சயின்டிஸ்ட் சந்துரு:)

தன்னை மறந்து வாயை திறந்து சிரிப்பவர்களிடம் ஏதோ ஒரு ஆத்மார்தம் இருக்க தான் செய்கிறது.

மகிழ்ந்திரு மனமே

கவலையற்றவர்களாக திரிபவர்கள் எல்லாம் நிச்சயம் கவலைகளுக்கு பழகிப்போனவர்களாக தான் இருப்பர்.

கடைநிலை ஊழியன்

கோவத்தை உப்பு போல பயன்படுத்தனும் !!
குறைந்தால் மரியாதை போயிரும் !!
கூடினால் மதிப்பு போயிரும் !!






# இன்றைய நாள்

**மேடம்:** மற்றவர்களின் பாராட்டு அதிகரிக்கும். வெற்றி வாய்ப்பு கூடும். நீங்கள் கடுமையாகப் பேசினாலும் சிலர் இயல்பாக எடுத்துக்கொள்வர். ஆரோக்கித்தைக் கெடுக்கும் தீய பழக்கத்தை விட்டெறியுங்கள்.

**இடபம்:** ஒரு விஷயத்துக்கு எதிர் பார்த்ததைவிடச் செலவு குறையும். பக்தி உணர்வு அதிகரிக்கும். கருணையால் பிறருக்கு உதவுவீர்கள். சகோதரவழியில் நன்மை உண்டாகும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த நற்செய்தியால் குடும்பத்தில் சந்தோஷம் கூடும். திடீர் அதிர்ஷ்டம் கதவைத் தட்டும். மனக் கவலைகள் தீரும். நல்ல செய்தி காதில் விழும். பயணம் செல்ல உகந்த நாள்.

**கடகம்:** தேவையற்ற கற்பனைகளால் தொல்லைக்கு ஆட்பட வேண்டாம். திட்டமிட்ட பணி ஒன்று நடந்தேறும். வருமானத்தில் மாற்றம் இல்லை. நீண்ட கால முயற்சியில் வெற்றி கிட்டும். உழைப்பு பலன் தரும்.

**சிம்மம்:** நண்பர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். உடல்நிலை மேம்படும். தாயின் உடல் நலம் சீராகும். நல்லவர்களின் அறிமுகத்தால் நன்மையுண்டு. மனதில் நிதானமும் அமைதியும் ஏற்படும்.

**கன்னி:** மின்னணு பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். செலவு அதிகரிக்கும். வேற்று மொழி பேசுவோரின் நட்பு கிடைக்கும். மனதில் குதூகலம் நிலவும்.

**துலாம்:** நம்பிக்கையோடு செயல்படுங்கள். பிரபலமானவர்களின் நட்பு கிடைக்கும். இழந்த பொருள் கிடைக்கும். குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் சேரும்.

**விருச்சிகம்:** சருமப் பாதுகாப்பில் அக்கறை தேவை. தீய பழக்கங்களை உதறுங்கள். வெளிநாட்டிலிருந்து நற்செய்தி வரும். சகோதரர் ஆதரவு கூடும். பேச்சில் நிதானம் தேவை.

**தனுசு:** வழக்கத்தைவிட அதிகம் பேசுவீர்கள். சுபவிஷயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். நம்பிக்கை மேலோங்கும். தர்ம சிந்தனை வளரும். நற்செயல்களில் ஈடுபடுவீர்கள்.

**மகரம்:** நாம் உண்டு நம் வேலை உண்டு என்றிருப்பது நல்லது. எதிர் பாலினத்தினரிடம் பழகும் போது அதிக கவனம் தேவை. ஆணவ எண்ணம் வேண்டாம்.


**கும்பம்:** கோபத்தைக் கட்டுப்படுத்தி நல்ல பெயர் எடுப்பீர்கள். முன் யோசனையுடன் செயல்பட்டு தொல்லையிலிருந்து தப்புவீர்கள்.

**மீனம்:** சிலரை வேண்டாம் என்று ஒதுக்குவதை தவிர்க்கவும். நிதானம் தேவை. உறவினர்களிடம் மனம் விட்டுப் பேசி மகிழ்வீர்கள். மனமாற்றம் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தைப் பிரிக்கும் திட்டம் எதுவும் இல்லை

## இந்திய மத்திய அரசு தெரிவிப்பு



சென்னை, ஓக.6
தமிழ்நாட்டை இரண்டாகப் பிரிக்கும் எந்த கோரிக்கையும் பரிசீலனையில் இல்லை என மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் தெரிவித்துள்ளார்.
தமிழகத்தில் கோவை, ஈரோடு, சேலம், திருப்பூர் உள்ளிட்ட கொங்கு மண்டலத்தை பிரித்து தனி மாநிலம் அமைக்க பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. அதற்கு அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பலர் எதிர்ப்பை வெளியிட்டு வந்த நிலையில், இதுவரை அதுதொடர்பான உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. இந்த நிலையில், இது குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பப்பட்டது.
அந்தக் கேள்விக்கு எழுத்துபூர்வமாக பதில் வழங்கிய மத்திய உள்துறை அமைச்சர் தமிழகத்தை பிரிக்கும் எந்த கோரிக்கையும் பரிசீலனையில் இல்லை எனத் தெரிவித்துள்ளார். இதன்மூலம் இந்த பிரச்சினைக்கு முடிவுக்கு வந்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (எ-இ)

## அன்னையின் 3ஆம் ஆண்டு நினைவு



அமரர்
மங்கயற்கரசி குமாரசிங்கம்
(ஓய்வுநிலை ஆசிரியர்)

உத்தம வாழ்வால் உயர்ந்த எம்
- அன்னையே
சக்தி தந்து எமைப்புவியில் சாதிக்க
- வைத்தவளே
ஆண்டுகள் மூன்று எமைவிட்டு நீவிர்
- நீங்கிடினும்
ஆற்றொணா துயருற்று வாழ்கின்றோம்
- உம் நினைவில்
வழிகாட்டும் ஒளிவிளக்காய் நீவீர்
- எமக்கென்றும்
வாழ்ந்திடுவீர் விண்ணுலகில்
- எம் அன்னையே

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தோற்றம் 25.10.1929
மறைவு 09.08.2018

திருமதி உ.முனீஸ்வரன்
திரு.கு.முல்லைக்குமார்

# தமிழக மீனவர்மீது தாக்குதல்: தமிழக முதலமைச்சர் கடிதம்

சென்னை, ஓக.6
தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.
இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது
கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி கோடியக்கரை கடற்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டு மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தச் சம்பவம் தமிழ்நாட்டில் குறிப்பாக கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. நம் நாட்டு மீனவர்க ளின் உயிரையும், உடைமைகளையும் பாதுகாக்க வேண்டியது நமது கடைமையாகும்.
சர்வதேச சட்டங்களையும் நடைமுறைகளையும் பின்பற்றாமல், நமது மீனவர்கள் மீது வன்முறையைப் பிரயோகிப்பது கண்டனத்திற்குரியது. இத்தகைய சூழலை நாம் கண்மூடி வேடிக்கை பார்க்க முடியாது. இதற்கு உடனடியாகத் தீர்வுக்காண வேண்டும்- என்றுள்ளது. (எ-இ)

# சோதனை ஓட்டத்தை ஆரம்பித்தது விக்ராந்த்

புதுடில்லி, ஓக.6
இந்தியாவில் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விக்ராந்த் விமானந்தாங்கி போர்க்கப்பலின் சோதனை ஓட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது.
உலக அளவில் சிறந்த கடற்படையை கொண்டிருக்கும் இந்தியாவிடம் ஒரே விமானந்தாங்கி போர்க் கப்பலாக, ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்பட்ட ஐ.என்.எஸ். விக்ரமாதித்யா மட்டுமே உள்ளது. அதன்பின்னர் உள்நாட்டிலேயே நவீன விமானந்தாங்கி போர்க்கப்பல் ஒன்றை வடிவமைக்கும் முயற்சியை மத்திய அரசு மேற்கொண்டு வந்தது. சுமார் 23 ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வந்த விமானந்தாங்கி போர்க்கப்பலின் பணிகள் ஏற்கனவே முடிந்து சோதனைக்கு தயாராகி வந்தது.
இங்கிலாந்திடம் இருந்து வாங்கப்பட்ட இந்தியாவின் முதல் விமானந்தாங்கி போர்க்கப்பலுக்கு சூட்டப்பட்டிருந்த 'விக்ராந்த்' (1997ஆம் ஆண்டு பணியில் இருந்து விடுவிக்கப்பட்டது) என்ற பெயரே இந்தக் கப்பலுக்கும் சூட்டப்பட்டுள்ளது. நீண்ட நாள்களாக எதிர்பார்க்கப்பட்டு வந்த இந்த உள்நாட்டு விமானந்தாங்கி போர்க்கப்பலான விக்ராந்தின் கடல் சோதனை ஓட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளது. (எ-இ)





# இந்திய வேளாண் சட்டத்துக்கு தமிழக விவசாயிகள் எதிர்ப்பு

சென்னை, ஓக.6
இந்திய வேளாண் சட்ட எதிர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவாக தமிழக விவசாயிகள் டெல்லியில் நேற்று வியாழக்கிழமை பேரணி நடத்தியுள்ளனர்.
தமிழ்நாட்டு விவசாயிகள் சங்கம் சார்பில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் டெல்லியில் இடம்பெறும் பேரணியில் பங்கேற்றனர்.
இது குறித்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த விவசாய சங்கத்தின் மாநில பொருளாளர் பெருமாள், தமிழக விவசாயிகள், புதிய வேளாண் சட்டங்கள், மேகதாது அணை விவகாரம் தொடர்பாக பேரணி நடத்தப்பட்ட்து என்று தெரிவித்துள்ளார்.
இதேவேளை, மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களை எதிர்த்து டெல்லியில் பல மாதங்களாக விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். (எ-இ)



# எல்லையில் உள்ள படைகளை இந்தியா - சீனா மீளப்பெறும்

## பேச்சுவார்த்தையில் இணக்கம்

கிழக்கு லடாக் எல்லையில் உள்ள கோக்ரா பகுதியில் நிறுத்தப்பட்டிருக்கும் இந்திய மற்றும் சீன இராணுவத்தினரை முழுமையாக திரும்பப் பெற இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. படைகளை விலக்கிக்கொள்வது குறித்து இந்திய - சீன இராணுவ அதிகாரிகள் இடையே இடம்பெற்ற பேச்சின் மூலம் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
இது தொடர்பாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,
இரு நாட்டு இராணுவ அதிகாரிகள் அளவில் நடத்தப்பட்ட பேச்சில் லடாக்கில் எல்லை கட்டுப்பாட்டுப் பகுதியில் கோக்ரா இராணுவ ரோந்து பகுதி உள்ளிட்ட பகுதிகளில் இரு நாடுகள் சார்பிலும் நிறுத்தப்பட்டிருக்கும் படைகளை முழுமையாக திரும்பப்பெற உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.
எல்லையில் கோக்ரா பகுதியில் இரு இராணுவத்தின் சார்பிலும் தலா 35 வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். படைகளை திரும்பப் பெற ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் அவர்கள் திரும்பப் பெறப் படுவார்கள் என்று தெரிவித்தார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டயலொக் இலங்கை பரா ஒலிம்பிக் 'Road to Tokyo'க்கான அணிக்கு தொடர்ந்து அனுசரணை

ஜப்பானின் டோக்கியோவில் நடைபெறவிருக்கும் 2020 பரா ஒலிம்பிக் போட்டிகளுக்காக ஒகஸ்ட் மாதம் இலங்கையிலிருந்து புறப்படும் ஜாவெலின் நட்சத்திரமான தினேஷ் பிரியந்த ஹெரத் தலைமையிலான 9 வீரர்களை கொண்ட வலுவான அணியை இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி வலுவூட்டுகின்றது.

2012 ஆம் ஆண்டு லண்டன் போட்டிகளில் இடம்பெற்ற பாரா ஒலிம்பிக் போட்டிகளில் பிரதீப் சஞ்சய T 46 பிரிவில் 400 மீட்டரினை 49.28 வினாடிகள் கடந்து வெண்கலப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார். 2016 ரியோ போட்டிகளில் பரா ஒலிம்பியன் தினேஷ் பிரியந்தஹெரத் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் வெண்கல பதக்கத்தையும் மேலும் 2019 ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் டுபாயில் இடம்பெற்ற உலக பாரா தடகள சாம்பியன் ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளார்.

'Road to Tokyo' போட்டிகளில் 09 உறுப்பினர்களை உள்ளடக்கிய அணியில், F46 ஜாவெலின் பிரிவில் போட்டியிடும் தினேஷ் பிரியந்த ஹெரத்,சமிததுலான் மற்றும் சம்பத் ஹெட்டியாராச்சி ஆகியோர் F44 மற்றும் F64 ஜாவெலின் போட்டிகளில் பங்கேற்கவுள்ளார்கள்.பாலித பண்டாரா F42 Shot Put இலும், மதுரங்க சுபசிங்க T47 400 மீட்டர் போட்டிகளிலும் போட்டியிடவுள்ளார்கள்.குமுடு பிரியங்க T45/46 100 மீட்டர் நீளம் பாய்தல் போட்டியிலும் ரஞ்சன் தர்மசேன சக்கர நாற்காலி டென்னிஸில் போட்டிகளிலும் பங்கேற்று நாட்டுக்கு பதக்கம் வெல்வதற்காக போராடவுள்ளார்கள். அதேநேரத்தில் சம்பத் பண்டாரா மற்றும் மகாஷ் ஜெயகோடி ஆகியோர் வில்வித்தை மற்றும் Rowing இல் பதங்களை வெல்வதற்கான இலக்கினை கொண்டுள்ளனர்.




டோக்கியோவுக்கு இலங்கை பாரா ஒலிம்பிக் கன்ஜிஜெண்ட் இலங்கையின் பரா விளையாட்டின் நீண்டகால பங்காளியாக இருக்கும் அதேவேளை இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான டயலொக் ஆசி ஆட்டாவினால் வலுவூட்டப்படுகின்றது.

டயலொக் 2015 முதல் தேசிய பரா ஒலிம்பிக்ஸ் குழு மற்றும் இலங்கை ராணுவ பரா விளையாட்டுக் குழுவின் பெருமைக்குரிய அனுசரணையாளராக இருந்து வருகிறது. மேலும் 2000 ஆம் ஆண்டில் இலங்கை பாரா ஒலிம்பிக் குழுவுக்கு முதன் முதலில் நிதியுதவி அளித்தது. அதன் பிறகு 2004, 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் தேசிய பாரா விளையாட்டுக்களுக்கும் நிதியுதவி வழங்குகின்றது.

இலங்கையின் Chef de Mission இன்மேஜர் ஜெனரல் ஜே.ஆர். அம்பெமோ ஹோட்டி கருத்து தெரிவிக்கையில் "லண்டன் மற்றும் ரியோவில் இடம்பெற்ற கடந்த இரண்டு ஆட்டங்களில் தொடர்ச்சியாக பதக்கங்களை வென்றதன் மூலம் இலங்கை பரா ஒலிம்பியன்கள் வியக்கத்தக்க வகையில் செயல்பட்டுள்ளனர். கொவிட்19 பரவல் காரணமாக பயிற்சிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டபோதிலும், போட்டியிட என்ன செய்யவேண்டுமோ அதைச்செய்ய குழு கடுமையாக உழைத்துள்ளது. இதன் மூலம் டோக்கியோவில் அதிக பதக்கங்களை வெல்வோம் என நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். "

இலங்கையில் மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு வலுவான ஆதரவினை வழங்கும் மற்றும் நீண்டகால அனுசரணையாளராக இருந்து அயராத முயற்சிகள் மேற்கொண்ட எங்கள் முதன்மை ஆதரவாளர்களான டயலொக் ஆசி ஆட்டாவுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். என மேஜர் ஜெனரல் ஆம்பெமோ ஹோட்டி மேலும் தெரிவித்தார்.

"இலங்கையின் தேசிய விளையாட்டுகளில் ஆழமான வேர்களைக் கொண்ட ஒரு நிறுவனம் என்ற வகையில் இNPஊ (தேசிய பாரா லிம்பிக்ஸ் கமிட்டி) உடனான எங்கள் தசாப்தகால கூட்டுறவைத் தொடர்வதில் பெருமிதம்கொள்கிறோம்" என்று டயலொக் ஆஆசி ஆட்டா பிஎல்சி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு வர்த்தக மற்றும் மற்றும் ஊடக பிரிவு சிரேஷ்ட பொதுமுகாமையாளர் ஹர்ஷ சமர நாயக்க கூறினார். "நமது பரா ஒலிம்பியன்கள் சமீப காலங்களில் இலங்கை விளையாட்டு வீரர்கள் உலக விளையாட்டுகளில் மிக உயர்ந்த மட்டத்தில் செயல்பட முடியும் என்பதைக் காட்டியுள்ளனர். 2020 டோக்கியோ விளையாட்டுப் போட்டிகளில் அவர்கள் அனைவரும் வெற்றிபெற வேண்டும் என விரும்புகிறேன்.

தேசிய கிரிக்கெட், ரக்பி, கைப்பந்து மற்றும் நெட்பால் அணிகளின் உத்தியேகப்பூர்வ ஆதரவாளராகவும் டயலொக் ஆசி ஆட்டா செயல்படுகிறது. ஜனாதிபதி தங்கக் கோப்பை கைப்பந்து போட்டியை வலுப்படுத்துவதற்கு மேலதிகமாக, தேசிய கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட நெட்பால் போட்டி, ரக்பி களகங்கள், பிரீமியர் கால்பந்து போட்டி, பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் மற்றும் பாடசாலை ரக்பி போட்டி, இராணுவ பாரா விளையாட்டு போட்டி, தேசிய பாரா விளையாட்டு போட்டி உலக பரா ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளும் இலங்கை பரா குழுவையும் ஆதரிக்கின்றது. டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சியின் வர்த்தக மற்றும் ஊடகப்பிரிவு சிரேஷ்ட பொதுமுகாமையாளர் ஹர்ஷசமர நாயக்க டோக்கியோ 2020 பாரா ஒலிம்பிக் போட்டிகளுக்கான இலங்கை அணிக்கு உத்தியோகப் பூர்வ அனுசரணையினை அணித் தலைவர் தினேஷ் பிரியந்த ஹேரத், மற்றும் NPC தலைவர் கர்னல் தீபால் ஹேரத் ஆகியோரிடம் கையளித்தார் . மேலும் டோக்கியோ விளையாட்டுக்களுக்கான இலங்கையின் அணியின் செஃப்டிமிஷன் மேஜர் ஜெனரல் ஜே.ஆர்.அம்பெமோ ஹோட்டி மற்றும் NPC இன் நிர்வாகக்குழு உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.



## பிரிவுபசார நிகழ்வு

தென்மராட்சி,ஒக.6

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றி ஓய்வுபெறும் மற்றும் இடமாற்றம் பெற்றுச் செல்லும் அலுவலர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றிய திருமதி. உருத்திரராசா கலைவாணி மற்றும் அலுவலக உதவியாளராக கடமையாற்றிய வேலுப்பிள்ளை பேரம்பலம் ஆகியோர் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளனர்.

அத்துடன் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றிய திருமதி.கண்ணன் விஜயலதா இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளார். இவர்களுக்கான பிரிவுபசார நிகழ்வே சுகாதார முறைப்படி மிக எளிமையாக நடைபெற்றது. (ஐ-9)

## அரசியல் பின்னணியில் ரிஷாத் தொடர் தடுப்பில்

### மனோ சுட்டிக்காட்டு

கொழும்பு,ஒக.6

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் குற்றப் பத்திரிகை இல்லாமல் தொடர்ச்சியாகத் தடுத்து வைத்திருக்கும் பின்னணியில் அரசியல் காரணங்கள் உள்ளன என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் நாடாளுமன்றில் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று ரிஷாத்துக்கு நடக்கின்றது. நாளை எனக்கு நடக்கும். எதிர்காலத்தில் நாம் ஆட்சிக்கு வரும்போது, உங்களுக்கும் நடக்கும். ஆகவே இது ஒரு பிழையான முன்னுதாரணம். இதை உடன் நிறுத்துங்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மகா சூத்திரதாரியை கைது செய்துவிட்டேன் என்று சபையில் அறிவித்தனர். [illegible] அவர்கள் மீதும் [illegible] அதை சட்டப்படி செய்யுங்கள். என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுபோக நெல் கொள்வனவு மன்னாரில் ஆரம்பம்

மன்னார்,ஒக.6


மன்னார் மாவட்டத்தில் சிறுபோக நெல் கொள்வனவு நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி மன்னார் மாவட்ட நெல் சந்தைப்படுத்தல் சபையினரால் நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி முருங்கன், ஆட்காட்டிவெளி மற்றும் நானாட்டான் ஆகிய நிலையங்களில் விவசாயிகள் தமது நெல்லை வழங்க முடியும். நாட்டில் பல பகுதிகளிலும் சிறுபோக அறுவடை நடைபெற்று வருவதால் மன்னார் மாவட்டத்தில் விவசாயிகளின் நலன் கருதி முன்னாயத்த நடவடிக்கையாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது- என்றார். (ஐ-213)



# கிம் ஜோங் உன்னுக்கு தலையில் 'ஒப்பிரேசன்'?

பியொங்யாங், ஓக.06

வடகொரிய அதிபரின் உடல்நலம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்துவரும் நிலையில், அவரது புதிய புகைப்படம் மீண்டும் ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் சமீபகாலமாக வெளிநிகழ்வுகள் எதிலும் கலந்துகொள்வதைத் தவிர்த்துவந்தார். குறிப்பாக, வடகொரியாவின் தந்தை எனப்படும் கிம் இல் சங்கின் பிறந்த தினக் கொண்டாட்டத்தில் அதிபர் கிம் ஜோங் உன் பங்கேற்கவில்லை. மேலும், கடந்த ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி நடைபெற்ற தனது தாத்தாவின் பிறந்த நாள் விழாவில் அதிபர் கிம் ஜாங் உன் கலந்துகொள்ளாத விடயம் பல சந்தேகங்களை எழுப்பியது. 2011 ஆம் ஆண்டு அதிபராகப் பதவியேற்ற பின்னர், முதல் முறையாக இந்த நிகழ்ச்சியை கிம் தவிர்த்தது ஏன் என்ற கேள்வி உலக நாடுகளில் எழுந்தது.

இந்த நிலையில் கிம்முக்கு சமீபத்தில் நடந்த இருதய சத்திர சிகிச்சைக்குப் பின்னர் அவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது என சி.என்.என் செய்தி வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து கிம்மின் உடல் நிலை குறித்துப் பல்வேறு வதந்திகள் பரவின. பின்னர் இந்த வதந்திகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கடந்த சில மாதங்களாக பொது நிகழ்வுகளில் கிம் பங்கேற்று வருகிறார்.

கடந்த ஜீலை 24 முதல் ஜீலை 29 ஆம் திகதி வரை நடந்த வடகொரிய இராணுவத் தளபதிகளுக்கான கூட்டத்தில் கிம் ஜோங் உன் கலந்துகொண்டார். அப்போது அவரது தலையின் கீழ் பெரிய அளவில் 'பிளாஸ்டர்' ஒட்டப்பட்டிருந்தது. இதனால் கிம் சமீபத்தில் சத்திர சிகிச்சை ஏதேனும் செய்துகொண்டாரா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனினும் இதுகுறித்து வடகொரியத் தரப்பில் இருந்து எவ்வித அதிகாரபூர்வத் தகவலும் வெளியிடப்படவில்லை. (அ)

### இந்தோனேசியாவில்–

# கொரோனா கோரத்தாண்டவம் ஒரேநாளில் 1747 பேர் பலி!

**ஜகார்த்தா, ஓக. 6**

**இந்தோனேசியாவில் கொரோனாவின் கோரத்தாண்டவத்தால் ஒரேநாளில் மட்டும் ஆயிரத்து 747 பேர் பலியாகியுள்ளனர். இதனால் அங்கு பெரும் அச்சநிலை தோன்றியுள்ளது.**

உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடுகளின் பட்டியலில் 4 ஆவது இடத்தில் உள்ள இந்தோனேசியாவில், அண்மைக்காலமாக கொரோனா தீவிரமாகப் பரவி வருகிறது. குறிப்பாக டெல்டா வைரஸ் அங்கு அதிவேகமாகப் பரவிவருகின்றது.

தலைநகர் ஜகார்த்தா, ஜாவா உள்ளிட்ட பகுதிகளில் கொரோனாவால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சிறப்பு அங்காடிகள், மசூதிகள் போன்றவற்றுக்கு மக்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தோனேசியாவில் நாளுக்கு நாள் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மருத்துவமனைகளில் இடப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மருத்துவமனையில் உள்ள வாகனத் தரிப்பிடங்களில் கூட கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. மருத்துவமனைகளில் கடும் ஒட்சிசன் தட்டுப்பாடும் நிலவுகின்றது. உரிய சிகிச்சை கிடைக்காத காரணத்தால், இதுவரை இந்தோனேசியாவில் கொரோனாவால் பலியானவர்கள் எண்ணிக்கை ஒரு லட்சத்தை கடந்துள்ளது. அதுவும் கொரோனாத் தொற்றால் கடந்த 24 மணிநேரத்தில் ஆயிரத்து 747 பேர் உயிரிழந்ததால், அங்குள்ள மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலை உருவாகியுள்ளது என கூறப்படுகின்றது. (அ)

# மின்னல் தாக்கியதில் 17 பேர் கருகிச் சாவு!

## பங்களாதேஷில் பரிதாபம்

மின்னல் தாக்கத்தால், திருமண நிகழ்வொன்றில் பங்கேற்ற 17 பேர் பரிதாபமாக பலியாகினர். இந்தப் பரிதாபச் சம்பவம் பங்களாதேஷில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

பங்களாதேஷில் கடந்த ஒருவாரமாகக் கடுமையான மழை பெய்துவருகின்றது. இந்த நிலையில், ஷிப்கன்ஜ் நகர் அருகே இடம்பெறவிருந்த திருமண நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக மணமகனை அழைத்துக்கொண்டு, அவரது உறவினர்கள் படகொன்றில் பத்மா நதியைக் கடக்க முற்பட்டனர். அப்போது கடுமையான இடி, மின்னல் அந்தப் பகுதியைத் தாக்கத் தொடங்கின. உடனடியாகப் படகில் இருந்து இறங்கிய அனைவரும் பாதுகாப்புத்தேடி அருகேயுள்ள கட்டடமொன்றை நோக்கி ஓடினர். ஆயினும் அதற்கிடையில் பயங்கரமான மின்னல் தாக்கியதில், அவர்களில் 17 பேர் சம்பவ இடத்திலேயே கருகி உயிர் மாண்டனர். எனினும் தெய்வாதீனமாக மணமகன் சிறிய காயத்துடன் உயிர்பிழைத்தார். இந்த சம்பவம், பங்களாதேஷில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

பங்களாதேஷில் காடுகள் அழிக்கப்படுவதால், மின்னல் தாக்குதலில் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# கொரோனா 20 கோடி!

வொஷிங்டன், ஓக.6

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை உலகளாவிய ரீதியில் 20 கோடியை கடந்துள்ளது. ஜோன்ஸ் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் தரவுகள் மூலம் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளின் பட்டியலில் 3 கோடியே 50 லட்சம் நோயாளர்களுடன் அமெரிக்கா முதலிடத்திலும், 3 கோடியே 10 இலட்சம் நோயாளர்களுடன் இந்திய இரண்டாம் இடத்திலும், 1 கோடியே 90 லட்சம் நோயாளர்களுடன் பிரேசில் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

இந்தியாவில் கண்டறியப்பட்ட உருமாறிய டெல்டா வகை கொரோனா வைரஸ் காரணமாக பல நாடுகளில் தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த வைரஸ் மிகவும் வேகமாகப் பரவக் கூடியதென அறியப்பட்டுள்ளது. இதே வேளை, உலகளாவிய ரீதியில் 40 கோடி பேருக்கு கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. கொரோனா தடுப்பூசி, வைரஸ் தொற்றுக்குள்ளாகுவதையும், மற்றவர்களுக்கு பரவுவதையும், கடுமையான நோய் அல்லது கொரோனா உயிரிழப்பையும் தடுக்க உதவுகிறது. (அ)

# காபூல் தாக்குதல்களுக்கு தலிபான் பொறுப்பேற்பு

காபூல், ஓக. 6

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புக்களுக்குத் தாம்தான் காரணம் என்று தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களை இலக்குவைத்து தாக்குதல் நடத்தலாம் என்று ஏற்கனவே எச்சரிக்கப்பட்டிருந்த நிலையில் நடத்தப்பட்ட இந்தத் தொடர் குண்டுபெடிப்பு பல்வேறு கேள்விகளையும் அச்சத்தையும் உலக நாடுகளிடையே ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் இந்தத் தாக்குதலுக்குக் காரணம் தாம்தான் என்றும் தம்மால்தான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் தலிபான்கள் அறிவித்துள்ளனர்.



முன்னதாக அமெரிக்காவின் முன்னாள் அதிபர் புஷ், தலிபான்கள் தம் கொடூர ஆட்சியை வெளியுலகுக்கு வெளிப்படுத்தாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். இதனால் அவர்களால் தூதரக அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் உள்ளது. அவர்கள் தூதரகங்களை நோக்கி தாக்குதல் நடத்துவார்கள் என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இசையை தன் முழுமூச்சாகக் கொண்டு வாழ்பவரும்
உலகம் முழுவதும் இருக்கின்ற
பெருங்கலைஞர்களின் குருவாகவும் சிறந்த சங்கீத
வித்துவானாகவும் ஈழத்து இசைத்துறையில்
தடம் பதித்தவருமான எங்கள் குருநாதர்

## ஸ்ரீமதி சக்திதேவி சிவகுமார் அவர்கள்




**இசைக்கலைமணி, சங்கீத கலாவித்தகர், இசைக்குயில், கலைஞானச்சுடர்** போன்ற பட்டங்களையும் பெற்றவர்.

**இன்று (06.08.2021) வெள்ளிக்கிழமை**
**பிரித்தானிய தமிழ்க் கலைஞர்கள்**
**ஐக்கியம் (UNITY)**
**நிறுவனத்தினால்**

## "கலைப்புரவலர்"

என்னும் பட்டம் வழங்கி மதிப்பளிக்கப்படுகிறார்.
இன்று விருதுபெறும் எங்கள் குருநாதர் மேன்மேலும் பல
விருதுகள் பட்டங்கள் பெற்றும் தம்பணியை மேலும் சீரும்
சிறப்புடன் நடத்த இறையருளை வேண்டி
சிரம் தாழ்த்தி பாராட்டி மகிழ்கின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்,
**யாழ். வாழ் மாணவர்கள்**

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF TECHNOLOGY

University of Jaffna will entertain applications from the qualified persons for the post of Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (unconfirmed) /Lecturer (Probationary) in **Biosystems Technology**.

**Note:**

For the above positions, special consideration will be given to those who have degrees in **Biosytems Technology** or any other related degrees specialized in Commercial Green **Farming Technology**.

Those who wish to apply are strongly advised to visit our University Website **www.jfn.ac.lk** for all the relevant details including remuneration package and statutory benefits.

**Closing date**

Application should reach us on or before **08.09.2021**

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank in favour of University of Jaffna **Collection Account Number: 970000090000387** of Bursar, University of Jaffna.

The candidates who apply for more than one post should submit **separate application** along with separate Bank slip. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. **Submission of Applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

**Applications and referees reports should be in the relevant format. Incomplete and Illegible applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.**

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**
**05.08.2021**

## INVITATION FOR BIDS (IFB)
## STILL PHOTOGRAPHY FOR 36th GENERAL CONVOCATION – 2021
## UNIVERSITY OF JAFFNA

1. **The Chairman, Procurement Committee of University of Jaffna** invites sealed bids from eligible and qualified bidders for the **Still Photography to cover 36th General Convocation - 2021 of the University of Jaffna** which is scheduled to be held on 15th, 16th and 17th of September, 2021.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have the valid business registration with a minimum of five year experience in relevant field.
3. Interested bidders may obtain further information from the **Deputy Registrar/ Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** and view the Bidding Documents at the same address on any working day from 9:00hrs to 16:00 hrs. Contact number: **021 2219201**
4. A complete set of bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Deputy Registrar, Capital Works and Planning, University of Jaffna until 20th August 2021, from 0900 hrs to 1500 hrs upon payment of a non-refundable fee of Rupees **two thousand** (Rs.2000/-) to be deposited to the Peoples Bank, University of Jaffna with the Reference No **"970000060000276"** should be filled in the Account Number column in the Deposit Slip.

   Bidding document and other details will be available in the University website www.jfn.ac.lk.
5. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna**, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch to reach on or before 10.00 am on 23rd August, 2021. Bids will be opened soon after closing at 10.00 am on 23rd August, 2021 at the Capital Works & Planning Branch in the presence of the bidders' representatives who choose to attend.
6. Bids shall be valid at least for a period of **60 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
7. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Bidding document.
   - In favour of **"Vice Chancellor, University of Jaffna"**
   - For a amount of **Rs. 15,000/=**
   - Issued by one of the agencies acceptable to the client.
8. Pre Bid meeting will be held on 18th August, 2021 at 10.00 am in the Capital Works & Planning Branch, University of Jaffna.

**Vice Chancellor,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna**
**04.08.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

### FACULTY OF ARTS

1. Senior Professor/ Professor of Geography / Political Science / Sociology / Philosophy / Education / Fine Arts / Tamil / Linguistics / Economics / History

2. Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in Translation Studies / Economics / Home Economics / Education / Drama & Theatre Arts / Fine Arts / Law / History / English Language Teaching / Christian Civilization / Art & Design (Painting) / Art & Design (Sculpture) / Information Technology*

- **For the positions in Translation Studies**
  Preference will be given to those who can able to teach through both Tamil and Sinhala mediums
- **For the positions in Economics**
  Preference will be given to those who have knowledge in Econometrics / Gender Economics / Rural and Urban Economics / Land and Real Estate Economics
- **For the positions in Education**
  Preference will be given to those who have relevant special degree with major component of Physical Sciences / Social Sciences
- **For the positions in Drama & Theatre Arts**
  Preference will be given to those who have additional qualifications and / or professional knowledge and practice in Theatre Music / Folk Theatre / Theatre set costume design
- **For the positions in Art and Design (Painting)**
  Preference will be given to those who have obtained 50% - 60% of total credit in the fields of Drawing and Painting from the Honours degree program
- **For the positions in Art and Design (Sculpture)**
  Preference will be given to those who have obtained 50% - 60% of total credit in the fields of Drawing and Sculpture from the Honours degree program

* Those who wish to apply for Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) attached to the IT Unit should have specialization in **Information Technology/ Computing**

3. Instructor Grade III in **Music (Vocal/Violin/Veena) / Dance / Art & Design (Painting/Sculpture) / Drama & Theatre Arts**

- **For the position in Drama & Theatre Arts**
  Preference will be given to those who have additional qualifications and / or professional knowledge and practice in Theatre Music / Folk Theatre / Theatre Management
- **For the position in Art and Design (Painting)**
  Preference will be given to those who have obtained 50% - 60% of total credit in the fields of Drawing and Painting from the Honours degree program
- **For the position in Art and Design (Sculpture)**
  Preference will be given to those who have obtained 50% - 60% of total credit in the fields of Drawing and Sculpture from the Honours degree program

4. Instructor in Computer Technology Grade II

Note : * *Practical tests will be conducted for the positions in Music, Dance, Art and Design and Drama & Theatre Arts*
* *Aptitude test will be conducted for the position in Instructor in Computer Technology Grade II*

### FACULTY OF HINDU STUDIES

1. Senior Professor/ Professor of Hindu Civilization
2. Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in Hindu Civilization / Saiva Siddhanta

- **For Senior Lecturer positions in Saiva Siddhanta**
  Preference will be given to those who have Substantial research experience in Meikanda Shastras

Those who wish to apply are strongly advised to visit our University Website **www.jfn.ac.lk** for all the relevant details including remuneration package and statutory benefits.

**Closing date:**
Applications should reach us on or before the date given below:

| | |
|---|---|
| Post of Senior Professor/Professor | - 08.10.2021 |
| Other posts | - 08.09.2021 |

Application forms and other details will be available in the University website www.jfn.ac.lk. Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to any branch of the Peoples Bank in favour of University of Jaffna Collection Account Number : 970000090000387 of Bursar, University of Jaffna.

The candidates who apply for more than one post should submit separate application along with separate Bank slip. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications and self evaluation with supportive documents for the Post of Senior Professor/Professor shall be sent to the Vice-Chancellor, University of Jaffna, Sri Lanka as required by the University Grants Commission Circulars Nos. 5/2015, 5/2015(i) (for Senior Professor), University Grants Commission Circulars Nos.916, 4/2014 and Establishments Circular No. 4/2010 (for Professor), (see http://www.jfn.ac.lk/index.php/circular/) with a covering letter.

Perfected applications for the other posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. Submission of Applications will not be entertained in person.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Application and referees reports should be in the relevant format. Illegible and Incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.
05.08.2021



**பணிப்பெண் தேவை**
யாழ் நகரில் வசிக்கும் வயோதிப பெண் ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
**தொடர்பு : 077 336 2949**

**மணமகள் தேவை**
1979, இந்து, உத்தராடம், Engineer, U.K சொந்த இடம்: சாவகச்சேரி, பதிவு: 6340, பதிவுக்கான 15% கழிவு. 12-August 2021 வியாழக்கிழமையுடன் முடிவடைகிறது. பதிவு செய்ய
www.EQMarriageService.com/ Create - Profile இற்கு செல்லுங்கள் www.EQMarriageService.com, Ensured Quality Lanka.Colombo 04.
**076 664 9401**

**மணமகன் தேவை**
1989, NRC, ரோகினி, Manager யாழ்ப்பாணம், பதிவு: 6329, பதிவுக்கான 15% கழிவு. 12-August 2021 வியாழக்கிழமையுடன் முடிவடைகிறது. பதிவு செய்ய
www.EQMarriageService.com/ Create - Profile இற்கு செல்லுங்கள் www.EQMarriageService.com, Ensured Quality Lanka.Colombo 04.
**076 664 9401**

**வாடகைக்கு தேவை**
நல்லூர், கல்வியங்காடு பகுதிகளில் சிறிய வீடு அல்லது Room வாடகைக்கு உடன் தேவை.
**077 640 2406**

**வேலையாள்கள் தேவை**
யாழ். மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நிறுவனத்திற்கு
**பின்வரும் வெற்றிடங்கள் உண்டு**
1. Heavy Machinery Operators (Motar Grader, Roller, JCB, Bobcat, etc)
2. நாட் கூலியாள்கள்
3. Labour Supply
தொடர்புகளுக்கு:
jaffnajobvacancy2021@gmail.com
**077 146 3411**


## விசுவமடுவில் பெண்ணைக் காணவில்லை

முல்லைத்தீவு, ஓக. 6

விசுவமடு மேற்கு அதிசய விநாயகர் கோவிலடி பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கருணாவதி என்ற பெண்ணை, கடந்த 02 ஆம் திகதி தொடக்கம் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மனநிலை பாதிக்கப்பட்ட அவரை, யாராவது கண்டால் தெரியப்படுத்துமாறு (தவச்செல்வன் (சின்னவன்) 0776793075, 0776463254) உறவினர்கள் கோரியுள்ளனர். (த-19)


**தேவை**
இயக்கச்சிப் பகுதியில் உள்ள, தென்னந்தோட்டத்தில் தோட்ட வேலையில் அனுபவம் உள்ள தங்கி நின்று வேலை செய்யக் கூடிய மதுப்பழக்கம் இல்லாத ஆள் தேவை. உணவுக்கான பொருள்கள் வழங்கப்படும். விடுமுறைகள் உண்டு. சம்பளம் மாதாந்தம் 20, 000.00 ரூபா தொடக்கம் 30.000.00 வரை வழங்கப்படும், மேலதிக விபரங்கள் பேசித் தீர்மானிக்கப்படும்.
**076 677 8825**


**கண்ணீர் அஞ்சலி**



எமது சங்கப் பணியாளர்
**செல்வி ஜிந்துஷா உதயகுமார்**
அவர்களின் அன்புத் தந்தை
**திரு.சுந்தரம் உதயகுமார்**
அவர்கள் 04.08.2021 இல் இறைபதம் அடைந்ததையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் - (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

**3 ஆம் ஆண்டு நினைவுகள்**



**அமரர் கனகசபாபதி சுரேந்திரன்**
(முன்னாள் பொது முகாமையாளர் செட்டிகுளம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)

குவலயத்தில் 14.05.1971 — சிவ மயத்தில் 09.08.2018

**திதி: அபரபக்க திரயோதசி**

உம் விழி மூடி மூன்றாண்டு காலம் விரைந்ததப்பா
வழி எங்கும் உம் நினைவில் எம் வாழ்வு தொடருதப்பா.....
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

இல.77, கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 343 5871, 021 221 4187

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
16
.
09
.
1973



இறப்பு
.
03
.
08
.
2021

## துரைவீரசிங்கம் விஜிதரன்

யாழ். உரும்பிராய் கிழக்கு கரந்தனைப் பிறப்பிடமாகவும், லண்டன் Northolt ஐ வசிப்பிடமாகவும் கொண்ட துரைவீரசிங்கம் விஜிதரன் கடந்த 03.08.2021 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - அன்னம் தம்பதிகள், காலஞ்சென்ற தம்பிமுத்து மற்றும் மாசிலாமணி தம்பதிகளின் அன்புப் பேரனும், துரைவீரசிங்கம் - இந்திராதேவி தம்பதிகளின் அன்பு மகனும், சிவஞானம் - நகுலேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், தனுஷா அவர்களின் அன்புக் கணவரும், சோபிகா, ஒலிவியா ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜிதா (லண்டன்), விஜயா (மைனா- கனடா), விஜயன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலநாதன், உமாகாந்த், தகாணி, பிரதீபன், யாமினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரிஷபன், தஸ்வின் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், கனுசா, வினுசன், பிரவீன், நேகா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06.08.2021) வெள்ளிக்கிழமை மு.ப 08:30 மணியளவில் உரும்பிராய் கிழக்கு கரந்தனில் உள்ள அவரது இல்லதில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத் துக்கு எடுத்-துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**Mobile**
**+ 947 785 64084**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# இந்தியாவில் நடந்தது இலங்கையில் நடக்கிறது

***களுபோவில மருத்துவமனையிலிருந்து ஊடகவியலாளர் திலக்ஷினி மதுவந்தியின் பதிவு இது***

எனது தாயாருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டது அவரை மருத்துவமனையில் சேர்க்க நீண்ட வரிசையில் காத்திருந்தேன். வரிசையில் காத்திருந்த போது இருவர் கண் முன்னே உயிரிழந்தனர். சிலர் மயங்கி கீழே விழுந்தனர். இந்தியாவைப் பற்றி நான் சொன்ன செய்திகளை இப்போது என் கண்களால் பார்க்கிறேன். அதிகாலை 1:20. இது களுபோவில மருத்துவமனையின் கொரோனா விடுதி. விடுதியினுள் ஒரு படுக்கையில் இரண்டு அல்லது மூன்று நோயாளிகள். அவர்கள் தீவிர நோய்வாய்ப்பட்டவர்கள். விடுதியில் உள்ள படுக்கைகளின் கீழ், மற்றவர்கள் உயிருக்கு போராடி, ஒட்சிசனைப் பெறுகிறார்கள். தரையில் நோயாளிகள் நடக்கப் பயப்படுகிறார்கள்.

மீதமுள்ள அனைவரும் (நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள்) நீண்ட இருக்கைகளிலும், நாற்காலிகள், மரங்களின் கீழ் படுத்திருக்கிறார்கள். மணல் தரையில் ஒரு போர்வையுடனும் அதுவும் இல்லாமல் படுத்திருப்பதை யும் காணமுடிகின்றது. குளிரிலும் நுளம்புக் கடியிலும், இந்த மக்கள் அனைவரும் கொரோனாவை எதிர்த்துப் போராடுகிறார்கள். மருத்துவமனைப் பணியாளர்கள் குறைவாகவே உள்ளனர். அவர்கள் ஒரு தெய்வத்தைப் போல கடினமாக நோயாளர்களுடன் போராடுகின்றனர். இந்த வாழ்க்கையில் பெரிய சந்தோசம் இல்லை. மேலும் உதவியற்ற நிலை. நாளைஎனக்கும்தொற்று ஏற்படும். நான் சொல்ல வேண்டியது ஒன்றே ஒன்றுதான். கொரோனாவை குறைத்து மதிப்பிடாதீர்கள். உங்களால் முடிந்தவரை கவனமாக இருங்கள். குடும்பத்தில் உள்ள அனைவரையும் கவனித்துக் கொள்ளுங்கள். இந்தியாவைப் பற்றி நான் சொன்ன செய்திகளை இன்றுநான் என் கண்களால் பார்க்கிறேன். கவனமாக இருங்கள். மிகவும் கவனமாக இருங்கள்...

**வேலையாட்கள் தேவை**

யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு ரொட்டி போடத் தெரிந்த சமையலாளர் தேவை.

**தொடர்பு : 077 330 7073**

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட வாரியாக பணிவாய்ப்பு - ( Full Time, Part Time )**

க.பொ.த.உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். தகுதி உடையோர் உங்கள் சுயவிபரக்கோவையினை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**northeastoffer@gmail.com**

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. மகேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு. வைரமுத்து நடராஜா**

அவர்கள் நேற்று (05.08.2021) வியாழக்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யாழ்ப்பாண மத்திய கல்லூரி

# மரண அறிவித்தல்



## திருமதி விநாயகமூர்த்தி (பூவிலிங்கம்) பூபதி

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கை வசிப்பிடமாகவும் தற்சமயம் கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி விநாயகமூர்த்தி (பூவிலிங்கம்) பூபதி நேற்று முன்தினம் (04.08.2021) புதன்கிழமை மாலை 5.50 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் புளியங்கூடலைச்சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - கண்மணி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற வேலணை மேற்கு கணபதிப்பிள்ளை (பிள்ளை குட்டியர்) - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், கலா, வத்சலா, காலஞ்சென்ற சந்திரகலை, விஜிதா, விமலா ஆகியோரின் தாயும், ஸ்ரீகாந்தராஜா (மெக்மிலன் புத்தக சாலை), செல்வ நாயகம், சிவரஞ்சன், சண்முகநாதன் (சுவிஸ் பொஸ்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

**34/2, எலிகவுஸ் றோட்,**
**கொழும்பு - 15**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**011 252 0650**

# மரண அறிவித்தல்

தோற்றம்
18
.
04
.
1953



மறைவு
05
.
08
.
2021

## திருமதி கமலாதேவி இரவீந்திரன்
( கிளி )

நெடுந்தீவு நடுக்குறிச்சியை பிறப்பிடமாகவும் இல. 57, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட **திருமதி கமலாதேவி இரவீந்திரன் (கிளி)** நேற்று (05.08.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டி சரவணமுத்து – சேதுப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும் சுப்பிரமணியம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் இரவீந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கிரிசன் மற்றும் டின்சி, தர்சன் (ஆசிரியர் - கிளி/கரியாலை நாகபடுவான், இல.02, அ.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகலட்சுமி (தங்கம்), சந்திரபாலன் (லண்டன்), நல்லையா (மல்லாவி), பேரின்பநாதன் (யா/புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம்), பாக்கியலட்சுமி (வசந்தி – நெடுந்தீவு) ஆகியோரின் சகோதரியும் அருனேந்திரன் (கனடா) அவர்களின் அன்பு மாமியாரும் டொன்வொஸ்கோ, வசந்தகுமாரி (லண்டன்), மல்லிகாதேவி, சசிகலா (ஆசிரியை), கிருபாவரதன் (ப.நோ.கூ.ச கிளை முகாமையாளர் - நெடுந்தீவு), காலஞ்சென்ற நவமணி, குணரத்தினம், குணமணி, யோகமணி, மனோன்மணி மற்றும் இராஜகுலேந்திரன், பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4.00 மணியளவில் திருநகர் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**உதயநகர் கிழக்கு,**
**கிளிநொச்சி**

**077 3712 807**
**077 859 0004**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா 2,669



கொழும்பு, ஓக. 6

நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 669 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 21 ஆயிரத்து 424 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,841 பேர் குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து வெளியேறியுள்ளனர். இதற்கமைய, இதுவரை நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 86 ஆயிரத்து 365 ஆக அதிகரித்துள்ளது. (22)

---

## வடக்கு...

நேற்றுமாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வடக்கிலும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை தினமும் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இவ்வாறு இனங்காணப்படுபவர்களில் தொற்றுநோய் அறிகுறி இல்லாதவர்கள் இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். வடமாகாணத்தில் 9 இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்கள் இயங்கி வருகின்றன. பெரும்பாலும் அனைத்து இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்களும் நிரம்பிய நிலையிலேயே காணப்படுகின்றன. தொற்றுநோய் அறிகுறிகள் உள்ள அதாவது காய்ச்சல் இருமல் உடையவர்கள் வைத்தியசாலைகளின் கொரோனா விடுதிகளில் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

**தொற்றாளர்கள் அதிகரித்தால் ஒட்சிசன் கிடைப்பதில் சிக்கல்**

வட மாகாணத்தை பொறுத்தவரை 4 ஒட்சிசன் மீள்நிரப்பு நிலையங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை, வவுனியா மாவட்ட வைத்தியசாலையென நான்கு வைத்தியசாலைகளிலும் ஒட்சிசன் சிலிண்டர்களை மீள்நிரப்பிக் கொண்டிருக்கின்றோம். இதற்கு மேலதிகமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, மன்னார் மாவட்ட வைத்தியசாலை என்பன அனுராதபுரத்தில் இருக்கின்ற ஒட்சிசன் வழங்கும் நிறுவனத்திடமிருந்தும் ஒட்சிசன் சிலிண்டர்களை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

தற்போதைய நிலைமையில் எங்களிடம் இருக்கின்ற கட்டமைப்பை கொண்டு ஒட்சிசன் தேவையை சமாளிக்கக்கூடிய நிலையே காணப்படுகின்றது. தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்தால் சிக்கல் நிலைமை உருவாகும். அதேவேளை மேலும் சில வைத்தியசாலைகளில் தொற்றாளர்களுக்கான விடுதிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றார்.

அதேநேரம் வடமாகாண மருத்துவமனைகள் அவசர நிலையை அறிவிக்கும் நிலைக்கே சென்றுகொண்டிருக்கின்றன என்று சுகாதாரத்துறையின் மூத்த அதிகாரியொருவர் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றால் வடக்கு மாகாணத்தில் மருத்துவக் கவனிப்புத் தேவைப்படுவோர் எண்ணிக்கை சடுதியாக இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் 60 தொற்றாளர்கள் வரையிலேயே விடுதிகளில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்த எண்ணிக்கை 140 இனைத் தாண்டியுள்ளது. தெற்கிலும் கொரோனாப் பரவல் தீவிரம டைந்துள்ளது. கொழும்பு ராகம மற்றும் கராப்பிட்டிய மருத்துவமனைகள் என்பன தொற்றாளர்கள் அதிகரிப்பால் அவசரகால நிலைமையை அறிவித்துள்ளன. வடக்கு மாகாணமும் அவ்வாறானதோர் ஆபத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது. மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து ஏதோ ஒரு வகையில் திறந்து விடப்பட்டிருக்கின்றது. கொழும்பின் நிலைமையை வடக்கில் இன்னமும் இரண்டு வாரங்களில் எதிர்பார்க்கலாம் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

**அவசர நிலையை அறிவிக்கும் கட்டத்தில் மருத்துவமனைகள்**

வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு உட்பட்ட 9 மருத்துவமனைகளில் கொரோனாத் தொற்றாளர்களைப் பராமரிப்பதற்கான விடுதிகள் உள்ளன. அங்கு 233 படுக்கைகள் உள்ளன. இரண்டு வாரங்களுக்கு முன்னர் வரையில் சுமார் 60 தொடக்கம் 70 தொற்றாளர்களே சிகிச்சை பெற்று வந்தனர். தற்போது அந்த எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. 143 தொற்றாளர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். குறிப்பாக பருத்தித்துறை மருத்துவமனையில் 20 கட்டில்களே உள்ளபோதும் 26 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கொரோனாத் தொற்றாளர்களுக்கான இரண்டு அதி தீவிர சிகிச்சை விடுதிகள் உள்ளன. ஒரு விடுதியில் 8 கட்டில்களும் மற்றைய விடுதியில் 3 கட்டில்களுமாக 11 கட்டில்கள் உள்ளன. அவை அனைத்தும் நிரம்பியுள்ளன. சாதாரணமாக 3 தொடக்கம் 4 பேர் வரையிலேயே சிகிச்சை பெற்று வந்த நிலையில் திடீரென அசாதாரணமாக இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. போதனா மருத்துவமனையில் கொரோனா நோயாளிகளுக்கான சாதாரண விடுதிகள் இரண்டு இயங்குகின்றன. இவை அனைத்தும் முழுமையான நிலையிலேயே காணப்படுகின்றன. நோயாளிகள் ஓரளவு குணமடைந்தாலும் இடைநிலை பராமரிப்பு நிலையங்களுக்கு மாற்றப்படுகின்றனர். மேலும் ஒரு விடுதி கொரோனா நோயாளிகளுக்காகத் தயாப்படுத்தப்பட்டுள்ளது. (ம-ஒ5,26)

## கர்ப்பிணி...

சுகாதார வழிகாட்டல்களை வெளியிட சுகாதார அமைச்சகம் முடிவுசெய்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே சுகாதார அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாப் பெருந்தொற்றைக் கையாள்வதற்கான புதிய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக கர்ப்பிணிப் பெண்களின் நலனில் அக்கறை கொண்டு இந்த வழிகாட்டல்களைத் தயாரித்து வருகின்றோம். இதன்படி கர்ப்பிணிப் பெண்கள் வீடுகளில் இருந்து பணியாற்ற அனுமதிக்கப்படுவார்கள் என்றார். (ம)

## எகிறுகிறது...

களும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 94 பேருடன் இதுவரை கொரோனாவால் உயிரிழந்தவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 821ஆக அதிகரித்தது. (ம)

## மணித்தியாலத்துக்கு...

தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இது கொவிட் வைரஸ் மற்றும் தடுப்பூசிக்கு இடையேயான போட்டி. நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதய நோய்கள் போன்ற சிக்கலான நோய்கள் உள்ளவர்களுக்குத் தடுப்பூசி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் என்பதால் தாமதமின்றி தடுப்பூசியைப் பெற வேண்டும்' - என்றார். (ம)

## 45,000....

தாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை 10 வயதுக்கு குறைந்த 19 ஆயிரத்து 688 சிறார்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதோடு, 10 தொடக்கம் 18 வரையான சிறுவர்களில் 26 ஆயிரத்து 143 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். 18 வயதுக்கு கீழ்ப்பட்ட 14 சிறுவர்கள் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்றார். அதேபோல், கடந்த 10 நாள்களாகக் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட 9 ஆயிரம் பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்து வருகின்றது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-22)

## யாழ்ப்பாணத்தில்...

பெற்றுவந்த ஏழாலையைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரும் புங்குடுதீவைச் சேர்ந்த 71 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 134ஆக அதிகரித்துள்ளது. (ம-26)

## வடக்கில்...

கள் அதிகார சபையால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நாடெங்கிலும் பால்மா உற்பத்திகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பால்மா இறக்குமதியை துறைசார் நிறுவனங்கள் குறைத்துள்ள நிலையில் தமது இருப்பில் ஏற்கனவே இருந்த பால்மா உற்பத்திகளை பல நிறுவனங்கள் பதுக்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு வடமாகாணத்தில் பால்மா பதுக்கலில் ஈடுபட்ட மூன்று வர்த்தக நிலையங்களே இவ்வாறு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளன. அத்துடன் அடுத்தடுத்த நாள்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் வர்த்தக நிலையங்களில் சிறப்புச் சோதனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம)

## அரச....

அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்று தீவிரமாகிவரும் நிலையில், அரச ஊழியர்களை வாரத்தில் இரு கட்டமாக மட்டுமே பணிக்கு அழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பான சுற்றுநிருபம், அரச சேவைகள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்படவுள்ளது - என்றார். (ம)

## தமிழ்...

கைதிகளின் உறவுகள் குரலற்றவர்களின் குரல் அமைப்புக்குத் தெரிவித்தனர். நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு தடுப்பூசியை வழங்குமாறு அவர்களின் உறவுகள் அரசிடம் பலமுறை கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இராணுவ...

டதை அடுத்து பொலிசாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதையடுத்து குறித்த எச்சங்கள் தொடர்பில் பொலிஸாரும் தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.


குறித்த பகுதியை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி லெனின்குமார் பார்வையிட்டதுடன், அந்தப் பகுதியில் அகழ்வுகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். இன்று மேலதிக அகழ்வுப் பணிகள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா – இங்கிலாந்து ஆட்டம் மழையால் பாதிக்கப்பட வாய்ப்பு

லண்டன், ஓக. 6

**இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றைய தினத்தின் கணிசமான பகுதிகள் மழையால் பாதிக்கப்பட்டன. இனிவரும் நாள்களும் கூட மழையால் பாதிக்கப்பட வாய்ப்புக்கள் அதிகம் என்றே கருதப்படுகின்றது.**



இந்த ஆட்டத்துக்காக அமைக்கப்பட்ட ஆடுகளம் முழுக்க முழுக்க பந்துவீச்சுக்கு ஒத்துழைக்கக்கூடியது.

இதனால் நாணயச் சுழற்சியில் வெற்றிபெறும் அணி பந்துவீச்சைத் தீர்மானிக்கும் என்றுதான் கருதப்பட்டது. ஆனால் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித்தலைவர் ரூட், ஆச்சரியம் தரும் வகையில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். மழையால் ஆட்டம் பாதிக்கப்படும் என்பதால் அவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் தெரிவித்தனர். தற்போது அதன்படியே ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது. (ம)

## டோக்கியோ ஒலிம்பிக்கில் சீனா தொடர்ந்து ஆதிக்கம்

டோக்கியோ, ஓக. 6

டோக்கியோ ஒலிம்பிக் தொடரில் பதக்கப் பட்டியலில் சீனா தொடர்ந்து முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றது. நேற்று இரவு வரையான நிலவரத்தின் படி 33 தங்கப்பதக்கங்கள், 24 வெள்ளிப்பதக்கங்கள், 16 வெண்கலப் பதக்கங்கள் என்று 73 பதக்கங்களுடன் சீனா முதலிடத்திலும், 28 தங்கப் பதக்கங்கள், 34 வெள்ளிப் பதக்கங்கள், 26 வெண்கலப் பதக்கங்கள் என்று 88 பதக்கங்களுடன் அமெரிக்கா இரண்டாவது இடத்திலும், 21 தங்கப்பதக்கங்கள், 9 வெள்ளிப்பதக்கங்கள், 14 வெண்கலப்பதக்கங்கள் என்று 44 பதக்கங்களுடன் ஜப்பான் மூன்றாவது இடத்திலும் உள்ளன. (ம)

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமன் பகுதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 1 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் தெல்லிப்பளை வைத்தியசாலை பின்புறத்திலிருந்து 400m தூரம் (பார்வையிடும் நேரம் - காலை 8.00 - மாலை 6.00 மணி வரை) தரகர் தேவையில்லை.

**1 ½ பரப்பின் விலை 10 00000 (பத்து லட்சம்)**

077 814 7389 / 077 614 7333

## விராட் கோலி 'கோல்டன் டக்'



லண்டன், ஓக. 6

இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் முதல் பந்திலேயே ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தார் கோலி.

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முதல் நாள் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கோலியிடம், அண்டர்சனை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றீர்கள் என்று கேட்கப்பட்டது. இதற்குப் பதில் வழங்கிய கோலி 'துடுப்பு மட்டையால்தான்' என்று நக்கலாகத் தெரிவித்தார். இதனால் கோலிக்கும் அண்டர்சனுக்கும் இடையிலான மோதல் தொடரில் பெரிதாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கோலியை 'கோல்டன் டக்' முறையில் வெளியேற்றினார் அண்டர்சன். (ம)

## 18 ஆண்டுகளின் பின்னர் பாக். செல்கின்றது நியூசிலாந்து அணி

வெலிங்டன், ஓக. 6

நியூசிலாந்து கிரிக்கெட் அணி சுமார் 18 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது.

செப்ரெம்பர் மாதம் இந்த இரு அணிகளுக்கும் இடையிலான தொடர் நடைபெறவுள்ளது. மூன்று ஒருநாள் ஆட்டங்களையும், ஐந்து ரி20 ஆட்டங்களையும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

முதலாவதாக ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. மூன்று ஆட்டங்களும் முறையே 17, 19, 21ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. 25ஆம் திகதி ரி20 தொடர் ஆரம்பமாகின்றது. (ம)



**மீடியா வேலை**

**YouTube சானலில்**

**செய்தி வாசிப்பாளர்கள் 2 பெண்கள் தேவை**

*சிறந்த தமிழ் உச்சரிப்பு!

*சிறந்த தமிழ் வாசிப்பு!

*பயிற்சி வழங்கப்படும்.

*அலுவலகம் யாழ்ப்பாணம்.

(வெளிமாவட்டம் என்றால் தங்குமிடம் உணவு இலவசம்)

தொடர்பு: 077 514 0838

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06. 08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.